பக்கங்கள் 28

# காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 10 ஞாயிற்றுக்கிழமை 23.06.2024 அதிர்வு 327

## நெடுந்தீவு இளைஞர் கொலை:
## பற்றைகளில் மறைந்திருந்த 3 சந்தேகநபர்களும் கைது!

(ந.லோகதயாளன்)

யாழ். நெடுந்தீவில் இளைஞர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத் துடன் தொடர்புபட்ட மூன்று சந்தேக 04▶



# ரணிலுக்கே சம்பந்தன் ஆதரவு



## ஐ.தே.க. அதீத நம்பிக்கை

"வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எடுப்பார் என்று நம்புகின்றோம். அந்தத் தீர்மானத்துக்கு வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சி களின் தலைவர்களும் இணங்குவார்கள் என்றும் நம்புகின்றோம்."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாள ரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர் தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கையில் மிகவும் அரசியல் அனுபவம் வாய்ந்த சிங்களத் தலைவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கிய இடம் வகிக்கின்றார். அதே வேளை, மிகவும் அரசியல் அனுபவம் வாய்ந்த தமிழ்த் தலைவர்களில் இரா.சம்பந்தன் முக்கிய இடம் வகிக்கின்றார். இருவரும் தவிர்க்க முடியாத ஆளுமைகள். 04▶

## கோர விபத்தில் தாயும் மகளும் பரிதாபச் சாவு!

### தந்தையும் மகனும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில்



மாத்தளையில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தில் தாயும் மகளும் பரிதாபகரமாக உயிரி ழந்துள்ளனர். அத்துடன் தந்தை யும் மகனும் படுகாயமடைந் துள்ளனர்.

ஓட்டோ ஒன்று, பஸ் ஒன்று டன் மோதியதில் இந்த 04▶




'மலைவிழுங்கி மகாதேவன் கள்' பற்றிக் கேள்விப்பட் டிருக்கின் றோம். தோலி ருக்கச் சுளை விழுங்கும் எம காதகப் பேர் வழிகள் அவர்கள். அத்தகையோர் பற்றிய ஒரு தகவல் இது:-

இலங்கைக் கடற்பரப்பிற்குள் ஊடு ருவும் இந்தியப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் 04▶



# சியோன் தேவாலயத்தின் புனரமைக்கும் பணிகளை ஜனாதிபதி பார்வையிட்டார்

**(பழுவூரான்)**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்கு தலுக்கு உள்ளான மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தின் புனரமைப் புப் பணிகளை ஆராய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முற் பகல் அங்கு விஜயம் செய்தார்.

தேவாலயத்திற்கு சென்ற ஜனாதி பதி, தேவாலயத்தின் பிரதான போத கர் ரொஷான் மகேசனுடன் கலந்துரை யாடினார். தேவாலயத்தின் புனர மைப்புப் பணிகள் இதுவரை ஏன் நிறை வடையவில்லை என்பது தொடர்பில் கேட்டறிந்த ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க, அது குறித்து உடனடியாக ஆராய்ந்து அறிக்கை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத் தார்.

அத்துடன், தேவாலயத்தின் திருத் தப் பணிகளை ஜனாதிபதி அலுவல கத்தின் நிதி ஒதுக்கீட்டில் துரிதமாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதி பதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனா திபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அந்த நடவடிக்கைகளுக்கு இலங்கை இராணுவத்தின் ஆதரவை வழங்கு மாறும் ஜனாதிபதி இராணுவத் தள பதிக்கு பணிப்புரை விடுத்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச் சர் எஸ். வியாழேந்திரனும் இச்சந்தர்ப் பத்தில் ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டனர்.











# நாட்டில் இருந்து வெளியேற தயாராகின்றனர் டாக்டர்கள்

25 சதவீத மருத்துவர்கள் நாட்டில் இருந்து வெளியேறுவதற்கு தயாராகி வருகின்றனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2 வருடங்களில் 1,800 மருத்துவர்கள் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

“நாட்டில் கொவிட் 19 மற்றும் பொருளாதார நெருக்கடி சூழல் ஏற்படுவதற்கு முன்னர் 200 மருத்துவர்களே வெளிநாடுகளுக்கு இடம்பெயரவிருக்கின்றனர் என சுகாதார அமைச்சின் புள்ளிவிவரங்களில் காணப்பட்டன.

எனினும் தற்போது 25 சதவீதமான மருத்துவர்கள் வெளிநாடுகளில் தொழில் பெறுவதற்கான தேர்வுகளில் சித்தியடைந்துள்ளனர் எனத் தரவுகள் காட்டுகின்றன.

இது எதிர்காலத்தில் நாட்டின் சுகாதார சேவையை மிகவும் பாதிக்கும். வைத்தியர்களுக்கான கொடுப்பனவு குறைந்தளவில் வழங்கப்படுவதே இதற்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது.

அரசாங்கம் இந்த விடயத்தை கருத்திற்கொண்டு வினைத்திறனுடன் செயற்பட்டால் வெளிநாடுகளுக்கு சென்ற வைத்தியர்களையும் நாட்டிற்கு மீள அழைக்க முடியும்.” – என்றார்.

# 2 கோடி ரூபா பெறுமதியான நகைகளுடன் இருவர் கைது

ஒரு கோடியே 90 லட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை சட்ட விரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மக்கா யாத்திரையிலிருந்து இலங்கைக்கு திரும்பிய மௌலவி மற்றும்



பெண் ஒருவரே கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு மற்றும் கல்முனை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என மேலதிக விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.



# சர்வதேச தரத்திலான சுற்றுலா வலயமாக சீதாவாக்கை ஈரநிலப் பூங்கா உருவாகிறது

சீதாவாக்கை ஈரநிலப் பூங்காவை சர்வதேச தரத்திலான சுற்றுலா வலயமாக மேம்படுத்துவது தொடர்பில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்காக நேற்று முன்தினம் முதல் சிறப்பு சேவையாக சீதாவாக்கை ஒடிசி ரயில் இயக்கப்பட்டுள்ளது.

இந்தியா, நேபாளம், சீனா, ஜப்பான், நியூசிலாந்து, தென்கொரியா உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து 100 இற்கும் மேற்பட்ட சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இதில் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராமேஸ்வரத்தில் கைதான புத்தளம் மீனவர்கள் மறியலில்

(ந.லோகதயாளன்)

இந்தியாவின் இராமேஸ்வரத்தில் கைதான புத்தளத்தைச் சேர்ந்த மீனவர்கள் இருவரும் எதிர்வரும் ஜுலை 5 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



புத்தளத்தில் இருந்து மீன்பிடிக்கப் புறப்பட்டு திசை மாறிப் பயணித்து விட்டதாகக் கூறி புத்தளத்தைச் சேர்ந்த இருவர் இராமேஸ்வரம் கடற்கரையில் நின்ற வேளை தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இருவரும் திசை மாறிப் பயணித்தனர் என்று தெரிவித்தபோதும் தமிழகப் பொலிஸார் அவர்கள் மீது சந்தேகம் கொண்டனர். இருவரும் பயணித்த படகில் எந்தவொரு மீனோ அல்லது மீன்பிடி உபகரணங்களோ காணப்படாததோடு இரு கான்களில் 55 லீற்றர் எரிபொருளும் காணப்பட்டுள்ளது. அதனால் தமிழகப் பொலிஸார் அவர்கள் இருவர் மீதும் அதிக சந்தேகம் கொண்டனர்.

மேற்படி இருவரும் தீவிர விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் ஜுலை 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டதையடுத்து இருவரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கோர விபத்தில்...**

விபத்து ஏற்பட்டுள்ளது என்று மாத்தளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அனுராதபுரத்துக்கு யாத்திரை சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்றே பஸ்ஸில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

வத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை, மகன் மற்றும் மகள் ஆகியோர் ஓட்டோவில் அனுராதபுரம் நோக்கிச் சென்றுள்ளனர்.

இதன்போது, தம்புள்ளை பகுதியிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றுடன் ஓட்டோ நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது ஓட்டோவில் பயணித்த 54 வயதான தாய் தம்மிகா பத்மினி மற்றும் 17 வயதான மகள் சசினி தாரகா ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

ஓட்டோவைச் செலுத்திச் சென்ற மகனும், பின்னால் இருந்து பயணித்த தந்தையும் படுகாயங்களுடன் மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

**ரணிலுக்கே...**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எடுப்பார் என்று நம்புகின்றோம். அந்தத் தீர்மானத்துக்கு வடக்கு – கிழக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் இணங்குவார்கள் என்றும் நம்புகின்றோம். எனவே, வடக்கு – கிழக்கு தமிழ் மக்களின் அமோக வாக்குகளால் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார் என்றும் நம்புகின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை ரணில் விக்கிரமசிங்க வரலாற்று வெற்றியை நிலைநாட்டுவார் என்றும் நம்புகின்றோம்.

தமிழ்ப் பொது வேட்பாளர் பயனற்ற விடயம். அதைப் பற்றிப் பேசி நாம் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை. தேவையில்லாத விடயத்தைப் பேசி காலத்தை வீணடிக்கக்கூடாது." – என்றார்.

**பற்றைகளில்...**

நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற படுகொலையுடன் நால்வர் தொடர்புபட்டனர் என்று செய்திகள் வெளிவந்திருந்தன. அவர்களில் ஒருவர் விபத்துக்குள்ளான நிலையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

எஞ்சிய மூன்று சந்தேகநபர்களும் நெடுந்தீவுப் பகுதியில் உள்ள பற்றைகளில் மறைந்திருந்த வேளை நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மூவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு நேற்று இரவு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

**இரகசியம் பரகசியம்...**

கைப்பற்றப்படுவதும், நீதிமன்ற உத்தரவில் அவற்றில் சில விடுவிக்கப்படுவதும், எஞ்சியவை அரச உடமையாக்கப்பட்டு, பின்னர் ஏலத்தில் விடப்படுவதும் வழமை.

இருந்த போதும் இரண்டு ஆண்டுகளிற்கு முன்பு இவ்வாறு ஏலம் விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, ஏலத்திற்காகக் கூடிய போது தான், அப்படி ஏலம் விடப்பட வேண்டிய இந்திய மீனவர்களின் பல படகுகள் அவை கட்டப்பட்டிருந்த இடங்களிலிருந்து மாயமாய்ப் போயிருந்தமை தெரிய வந்தது எனபதெல்லாம் பழைய கதை.

இப்போதைய புதுக் கதை என்னவென்றால் மன்னாரில் நல்ல நிலையில், கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த – ஒவ்வொன்றும் கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியான – நான்கு இந்திய இழுவைப் படகுகள் கடலில் மூழ்கி விட்டன எனக் கடற்படையினரால் நீதிமன்றத்திற்கு 'கணக்கு' விடப்பட்டிருப்பதுதான். மன்னிக்கவும், 'கணக்கு' காட்டப்பட்டிருப்பதுதான்.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய சமயம் மன்னார் மாவட்டத்தை ஒட்டிக் கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட படகுகள் மன்னார் கடற்படை முகாம்களில் உள்ள இறங்கு துறைகளை ஒட்டியே தரித்து வைக்கப்படுகின்றன.

இவ்வாறு கடற்கரையை அண்டி நிறுத்தப்பட்டிருந்த இந்திய இழுவைப் படகுகளில் நான்கே கடலில் மூழ்கிவிட்டன எனத் தலைமன்னார் கடற்படையினரால் மன்னார் நீதிமன்றிற்கு எழுத்தில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

தாழ்வுப்பாடு மற்றும் தலைமன்னார் பகுதிகளில் தரித்து நின்ற தலா இரு படகுகள் வீதம் நான்கு படகுகளே மூழ்கின என நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது.

இவற்றில் ஓர் படகு மட்டும் வழக்கு விசாரணை முடிந்து அரசுடைமையாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

எஞ்சிய மூன்று படகுகள் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் தற்போதும் நீடிக்கின்றன.

இவ்வாறு வழக்கு இடம்பெறும் படகுகள் மூன்றும் கடலில் மூழ்கிவிட்டன என்று கடற்படை கையை விரிக்கின்றமையினால் அவை தொடர்பான வழக்கை எவ்வாறு தொடர்ந்து நடத்துவது என மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் தலையைப் பிய்க்கின்றனர்.

அந்த ட்றோலர் படகுகள் ஒவ்வொன்றும் பதினைந்து அடிக்கு மேல் உயரம் கொண்டவை. கரையை அண்டிக் கட்டியிருந்தவை. கடலில் மூழ்கினாலும் சிறு பகுதியாவது கடலுக்குள் தெரியும்.

இதன் காரணமாக ட்றோலர் படகுகள் கடலில் மூழ்கியிருப்பின் அவற்றின் ஒளிப்படங்களையாவது மன்றில் சமர்ப்பிக்குமாறு கடற்றொழில் நீரியல்த் திணைக்கள அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளின் கோரிக்கைக்கு அடுத்த தவணை வழக்கின் போது கடற்படையினர் என்ன பதில் அளிக்கின்றனர் என ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

பல கோடி ரூபா பெறுமதியான படகுகள் 'கால் முளைத்து நகர்ந்த பின்னர்' கடலில் அவற்றின் தடம் தேடுவது அர்த்தமற்றது என்கின்றன விடயமறிந்த தரப்புகள்.

இந்த விடயம் மீண்டும் இலங்கை, இந்திய மீனவர்களின் பேசு பொருளாக மாறும் என்பதில் மட்டும் ஐயம் இல்லை.



# முஸ்லிம் காங்கிரஸ் பேராளர் மாநாட்டில் அமைதியின்மை!

## மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக ரவூப் ஹக்கீம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 31 ஆவது பேராளர் மாநாடு நேற்று காத்தான்குடியில் நடைபெற்ற போதே இந்தத் தெரிவுகள் இடம்பெற்றன.

கட்சியின் பதவி நிலைகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பெயர்கள் மாநாட்டில் அறிவிக்கப்பட்டன.

கட்சியின் தலைவராக ரவூப் ஹக்கீமும் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான அலிசாஹிர் மௌலானா, எச்.எம்.எம். ஹரிஸ், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்ட 7 பேர் உப தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றைய மாநாட்டின் ஆரம்பத்தில் சம்மாந்துறையில் இருந்து சென்ற சிலருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மீண்டும் அவர்கள் மண்டபத்திற்குள் சென்றபோது அமைதியின்மை ஏற்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டில் அமைதியின்மையை தோற்றுவித்த 3 பேர் கைது செய்யப்பட்டனர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கட்சியில் சிலருக்கு பதவி வழங்கியமை தொடர்பில் தாம் அதிருப்தியடைவதாகக் கூறி மேலும் சிலர் மண்டபத்தில் இருந்து வெளியேறினர்.


We are HIRING
Front Office Executive

CANDIDATE PROFILE

- Passed GCE A/L
- Strong interpersonal and communication skills.
- Excellent telephone etiquette and knowledge.
- Hands-on experience in front desk operations
- Basic computer literacy (MS Office packages)
- Outgoing personality
- Certificate / Diploma in Business Administration or a similar field will be an added advantage.

Walk-in-interview on 22-06-2024
between10.00 am to 12.00 noon



IIS CITY CAMPUS
No-655, Navalar Road, Jaffna.
021 222 8060 |077 666 0054 | www.iis.edu.lk
IIS CITY CAMPUS

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிறுபான்மையினர் சஜித்துடன்?

ஜனாதிபதி தேர்தலுக்கான காலம் நெருங்க, நெருங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஓட்டமும் வேகம் எடுக்கின்றமை துலாம்பரமாகத் தெரிகின்றது.

தினசரி நாட்டின் ஏதோ ஒரு மூலைக்கு விமானத்திலும் ஹெலியிலும் பறந்து பறந்து பொது நிகழ்வுகளில் பங்கு பற்றுகின்றார் அவர். நேற்று மட்டக்களப்பில் நின்றார். சில சமயங்களில் இன்று ஆரம்பமாகும் இந்த வாரத்தில் மீண்டும் ஒரு தடவை அவர் வடக்கே வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நேற்று மட்டக்களப்பு விஜயத்தின் இடையே இராஜாங்க அமைச்சர் பிள்ளையானின் அலுவலகத்துக்கும், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் இல்லத்துக்கும் அவர் 'விசிட்' அடிக்கத் தவறவில்லை.

அமைச்சர் டக்ளஸ், இராஜாங்க அமைச்சர் பிள்ளையான், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் போன்றோர் எல்லோரும் ரணிலின் அரசில் இடம் பெற்றுள்ளவர்கள்தான். அவர்கள் எல்லோரும் வரும் ஜனாதிபதி தேர்தலில் தங்கள் ஆதரவு - முழுமையான ஆதரவு - ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான் என்று வெளிப்படுத்தி விட்டனர்.

அதேசமயம் தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் மூவருடனும் திறந்த மனதுடன் உரையாடுவோம் என்று கதவை திறந்து வைத்துக் காத்திருக்கின்றது பிரதான தமிழ்க் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி.

ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியினரும் தாங்கள் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு என்று கூறினாலும், தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் மூவருடனான உரையாடலுக்கான கதவை திறந்தே வைத்துள்ளனர்.

ஏற்கனவே அமைச்சர்கள் டக்ளத் தேவானந்தா, பிள்ளையான், வியாழன் போன்றோர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அணி சேர்ந்துள்ள நிலையில் - சில சமயங்களில் அந்தக் கூட்டுக்குள் கருணாவும் அணி சேருவதற்கான வாய்ப்பு உள்ள பின்னணியில் - அப்படியான தரப்புகளை இணைத்துள்ள ரணிலுடன் தமிழரசு உட்பட தமிழ் தேசிய கட்சிகள் இந்த தேர்தலில் அணி சேர்வது துர்லபமே.

ரணில் விக்கிரமசிங்க தவிர்ந்த மற்றிருவரில் ஜே.வி.பி. தொடர்பில் தமிழ்த் தேசியத் தரப்பினருக்கு ஏற்கனவே பெருங்கடுப்பும் சீற்றமும் இருக்கின்றமையினால், தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவு ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ பக்கம் திரும்பவே அதிக வாய்ப்புக்கள் தென்படுகின்றன.

ரெலோ, புளொட் கட்சித் தலைவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நெருக்கமாகப் பழகினாலும், வடக்கில் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர் டக்ளஸுடன் நிலையெடுத்து இருக்கையில், அத்தரப்புடன் அணி சேர்ந்து ரணிலை பகிரங்கமாக ஆதரிப்பது ரெலோ, புளொட் தலைவர்களுக்கும் கஷ்டமானதாகவும் அரசியல் ஆபத்தை ஏற்படுத்தும் விவகாரமாகவும் இருக்கும் என்பதும் கண்கூடு.

அதேசமயம் 13ஆவது திருத்தம் தொடர்பில் பொலிஸ் அதிகாரம் பகிரப்படாத 'பதிமூன்று மைனஸ்' பற்றியே அண்மைக் காலத்தில் தெளிவாகவும் அப்பட்டமாகவும் கருத்து வெளியிட்டு வருகிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அந்த நிலைப்பாட்டில் இருந்து தம்மை முழுமையாக விடுவிக்கும் எண்ணத்திலோ, கருத்திலோ அவர் இல்லவே இல்லை என்று கூறப்படுகின்றது.

பெரும்பாலான பிரதான மலையகத் தமிழ் கட்சிகளும், முஸ்லிம்களின் கட்சிகளும் கூட சஜித் பிரேமதாஸ பக்கம் அணி திரளக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதனால் தமிழ்த் தேசிய தரப்புகளும் கட்சிகளும் கூட அத்திசையில்தான் நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அப்படிப் பார்த்தால் சிறுபான்மை இனத்தவர்களின் கட்சிகள் - வடக்கு, கிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள், மற்றும் முஸ்லிம்களின் பெரும்பான்மையான கட்சிகள் - ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர்த்து, சஜித் பிரேமதாஸ பக்கமே சாயும் வாய்ப்பு அதிகம் உண்டு என்றே கணிக்கப்படுகிறது.

கடைசி நேரத்தில் பெரிய மாற்றங்கள், அதிசயங்கள் நிகழ்ந்தாலேயன்றி, சிறுபான்மையினரின் வாக்குகள் இந்தத் தடவையும் சஜித் பிரேமதாஸ பக்கம் செல்வதற்கு சாத்தியங்கள் அதிகம் உண்டு.

# நாட்டு மக்களுக்கு உரிமைகளை வழங்குவதே பிரதான நோக்கம்!

## மட்டக்களப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு





(பழுவூரான்)

"நாட்டு மக்களுக்கு உரிமைகளை வழங்குவதே தனது பிரதான நோக்கம். த்துடன் திருகோணமலையை பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்ய தீர்மானித்துள்ளோம்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கம் முன்னெடுத்து வரும் உறுமய தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 27,595 குடும்பங்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு, திராய்மடு மாவட்ட செயலக வளாகத்தில் ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதற்கு முன்னதாக மட்டக்களப்பு திராய்மடு பிரதேசத்தில் 1,055 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாவட்ட செயலகத்திற்கான புதிய கட்டிடத்தை ஜனாதிபதி திறந்துவைத்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கான சேவைகளை விஸ்தரித்து வினைத்திறனாக்கும் நோக்கில் இந்த புதிய மாவட்ட செயலகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பெயர் பலகையை திரைநீக்கம் செய்து மாவட்ட செயலகத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, அங்கு கண்காணிப்பு விஜயத்தையும் மேற்கொண்டார்.

இதன்பின்னர் மட்டக்களப்பு மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி உரிமையற்ற 27,595 குடும்பங்களுக்கு உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளது. அதில் இதுவரை 2610 பேருக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுதவிர உயர் தர தேசிய பொறியியல் டிப்ளோமா நிறுவனத்தில் ஆங்கில டிப்ளோமா பெற்ற 252 பேருக்கும் இன்று ஜனாதிபதி தலைமையில் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்,

"திருகோணமலையை பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்ய தீர்மானித்துள்ளோம். அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்த போது அதற்கு இந்தியாவின் ஆதரவைப் பெறுவது குறித்து விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது. விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் இந்தப் பகுதிகளில் பாரியளவிலான விவசாய செயற்பாடுகளைத் தொடங்க திட்டமிட்டுள்ளோம். மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் அபிவிருத்தி செய்யப்படாத மகாவலி காணிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலும், வெருகலாறு முதல் அறுகம்பே வரையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு கோட்டையை தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் சுற்றுலாத் துறைக்காக அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் இந்தப் பிரதேசத்திற்கு ஒரு சிறந்த ஹோட்டல் கிடைக்கும்.

மேலும் இப்பகுதியில் பால் உற்பத்தித் துறையை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு பொருளாதார மாற்றச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், பாரிய பணிகள் இங்கு செயல்படுத்தப்பட உள்ளன. இதன்படி திருகோணமலையை பிரதான ஏற்றுமதி பொருளாதா மையமாக மாற்ற முடியும்.

கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஆகிய இரண்டும் இங்கு அமைந்துள்ளன. இப்பிரதேசத்தில் கல்வியை மேலும் மேம்படுத்த திட்டமிட்டுள்ளோம். தொழிற்கல்வித்துறையின் சீர்திருத்தத்தின் மூலம் அதிகளவான இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வாய்ப்புகளை வழங்க முடியும். மூன்று, நான்கு ஆண்டுகளாக ஆசிரியர்களை நியமிக்க முடியாததால், பாடசாலைக் கல்வி மேம்பாட்டிற்காக, இன்று ஆசிரியர் நியமனமும் வழங்கப்பட்டது.

நம் நாட்டில் வேலையில்லா திண்டாட்டம் ஒரு பாரிய பிரச்சினையாக மாறிவிட்டது. அதற்கேற்ப, புதிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். நாங்கள் மிகவும் கடினமான நேரத்தை எதிர்கொண்டோம். இந்த நாட்டின் சாதாரண மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடு மீண்டும் அபிவிருத்தி அடையும் போது அந்த மக்களை ஒருபோதும் மறக்க மாட்டோம்.

அதன்படி மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உரிமை வழங்கும் உறுமய திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். இப்போது உங்களுக்கு ஒரு நிலத்தின் சட்டபூர்வ உரிமை உள்ளது. யாரும் அடிபணிந்து வாழத் தேவையில்லை. குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு "அஸ்வெசும" நிவாரணத் திட்டத்தை செயல்படுத்தினோம். தற்போது விவசாயிகளுக்கு காணி உரிமை வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதிக்கு 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட உள்ளன. இந்தக் காணி உறுதிப்பத்திரங்களை வினைத்திறனாக வழங்க சம்பந்தப்பட்ட அனைத்து அரசாங்க அதிகாரிகளையும் கிராமங்களுக்கு அனுப்புவதற்கான வேலைத்திட்டத்தையும் நாங்கள் தயாரித்துள்ளோம்.

அப்போது, இந்த காணி உறுதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் மாவட்ட செயலகத்திற்கோ பிரதேச செயலகத்திற்கோ செல்லத் தேவை

தொடர்ச்சி▼

# நாட்டு மக்களுக்கு உரிமைகளை வழங்குவதே பிரதான நோக்கம்!









தொடர்ச்சி ▲

யில்லை. மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், காணி உத்தியோகத்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆளுநர் ஆகியோர் கிராமத்திற்குச் சென்று காணி உறுதிகளை மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்வார்கள். எதிர்வரும் திங்கள் கிழமை அந்த வேலைத்திட்டத்தை தொடங்கி விரைவில் நிறைவு செய்ய அறிவுறுத்தியுள்ளேன். எனக்கு ஒரே ஒரு குறிக்கோள் தான் உள்ளது. அந்த உரிமையை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். காணி உரிமையை பாதுகாக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.”– என்றார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் ஏ. எல். எம். அதாவுல்லா உரையாற்றுகையில்,

“மட்டக்களப்பு மக்களுக்கான புதிய மாவட்ட செயலக கட்டிடத் திறப்பு விழா, காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு, ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு என்பவற்றில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று வருகை தந்தமை, வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாகும். இப்போதெல்லாம் தேர்தல் பற்றித்தான் எல்லோரும் கதைக்கிறார்கள். வேட்பாளர் யார் என்று கேட்கிறார்கள். மேலும் அரசியல் தலைவர்கள் யாழ்ப்பாணம் சென்று தமிழ் மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்குகின்றனர். தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். உங்களால்தான் அனைவரும் அந்தக் கருத்துக்கு வந்ததில் பெருமை கொள்கிறோம்.

போரினால் நாம் இழந்தது ஏராளம். இனி இது போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழக்கூடிய சூழலை உருவாக்குவது நமது பொறுப்பு. இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், என அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து வாழக்கூடிய ஒரு நாடு உருவாகும் என இந்நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர். மக்கள் அதிகாரத்தை வழங்கினால், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்.”– என்றார்.













# ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு; விடுதலைப் புலிகள் மக்கள் கட்சியின் தலைவர் உறுதி

## இனப்பிரச்சினைக்கும் நிரந்தர தீர்வு வழங்கப்படும் என்றார் ஜனாதிபதி





எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விற்கு தமது கட்சி ஆதரவளிக்கவுள்ள தாக விடுதலைப் புலிகள் மக்கள் கட்சி யின் தலைவரும், இராஜாங்க அமைச் சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் விடுதலைப் புலிகள் மக்கள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந் திரகாந்தன் உள்ளிட்ட கட்சி உறுப்பி னர்களுக்கு இடையிலான சந்திப் பொன்று நேற்று மட்டக்களப்பில் உள்ள கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தை அபி விருத்தி செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டத்திற்கு ஆதரவு வழங்கினால் மண்ணை நம்பி வாழும் கிழக்கு மக்களுக்கு சொந்தக் காலில் நிற்கும் வாய்ப்புக் கிடைக்கும் என சிவநேசதுரை சந்திரகாந்தன் இதன் போது தெரிவித்தார்.

இதன்போது உரையாற்றி ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பு வதுடன், இனப்பிரச்சினைக்கும் நிரந் தர தீர்வு வழங்கப்படும். அதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என தெரிவித்தமையுடன், எதிர்வரும் 05 வருடங்களில் கிழக்கு மாகா ணத்தை விரிவான அபிவிருத்திக்குக் கொண்டு செல்லும் சவாலை தான் ஏற்றுக்கொள்கிறார் எனவும் வலியுறுத் தினார்.

இதன்போது ஜனாதிபதி கருத்து தெரிவிக்கையில் –

“நாட்டில் வலுவான பொருளா தாரத்தை உருவாக்கும் அதேவேளை யில், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண நாம் பாடுபட வேண்டும். மேலும், இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். கிழக்கு மாகாணம் வளர்ச்சி குறைந்த மாகாணமாகும். அடுத்த 05 வருடங் களிலும் கூட இந்த மாகாணத்தை அபிவிருத்தி குறைந்த மாகாணமாக கைவிட்டுவிட முடியாது. எனவே கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வ தற்குத் தேவையான வேலைத் திட் டத்தை உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டும். அதன்போது மக்க ளின் வருமான நிலையை உயர்த்த வேண்டும்.

மேலும், நாட்டின் வளர்ச்சியடையாத ஏனைய மாகாணங்களை அபி விருத்தி செய்யத் தேவையான வேலைத் திட்டத்தை நாங்கள் அமுல்படுத்தி வருகின்றோம். திருகோணமலை மாவட் டத்தில் பாரிய அபிவிருத்தியை ஏற் படுத்த திட்டமிட்டுள்ளோம். அதற்காக இந்தியா மற்றும் ஏனைய வெளி நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். மேலும் இப்பகுதிக ளுக்கு புதிய தொழில்களையும், முத லீடுகளையும் கொண்டு வர நடவ டிக்கை எடுத்து வருகிறோம். விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தால், புதிய நிலம் விளைச்சலுக்கு பயன்படுத் தப்படுகிறது. இதன் மூலம் மக்கள் பெருமளவு வருமானம் ஈட்ட முடியும். மேலும், இந்தப் பகுதியில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த முடியும். ஹிங் குரக்கொட விமான நிலையம் அபி விருத்தி செய்யப்படுவதன் மூலம் திரு கோணமலை, மட்டக்களப்பு, பொலன் னறுவை, தம்புள்ளை, அனுராதபுரம் ஆகிய பிரதேச மக்களும் நன்மையடை வார்கள். மட்டக்களப்பு விமான நிலை யமும் அபிவிருத்தி செய்யப்பட வேண் டும். இந்தச் சவாலை நாம் ஏற்க வேண்டும். அந்தச் சவாலை வென்று கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி யடைந்த மாகாணமாக மாற்றுவதற்கு நாம் செயற்பட்டு வருகின்றோம். மேலும், இனப்பிரச்சினையை இனியும் இழுத்தடிக்க வேண்டிய அவசிய மில்லை, அதனை விரைவாக தீர்க்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.” – என்றார்.

சிவநேசதுரை சந்திரகாந்தன் கருத்து தெரிவிக்கையில் –

“இன்று ஒரு வரலாற்று முக்கியத் துவமிக்கதொரு நாளாகும். கிழக்கு மாகாணத்தின் தமிழ் மக்களின் தலை விதியிலும் எதிர்கால அபிவிருத்தியி லும் ஒரு புள்ளியாக அமையும் என்ப தில் ஐயமில்லை. எமது மாவட்டம் உட் பட கிழக்கு மாகாணம் விவசாயம் மற்றும் மீன்படித் துறையை அடிப்படை யாகக் கொண்டுள்ளது. இந்த மாகா ணத்தில் இருக்கின்ற பொருளாதார வளங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றால் நிச்சயமாக ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைய வேண்டும். ஏனென்றால் இங்கு உள்ள வளங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற கொள்கையோடு அவர் இருக்கின்றார். அதனால்தான் நாம் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக் குத் தீர்வுகளை மாகாண சபை மூலம் இயன்றளவு வழங்குவதுடன் அதிகா ரங்களை வழங்க வேண்டும் என்று வெளிப்படையாகக் கூறுகின்றார். எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்காலத்தில் இந்த தீர்வுகளைப் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. எனவே அதற்கு

தொடர்ச்சி▼



# ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு; விடுதலைப் புலிகள் மக்கள் கட்சியின் தலைவர் உறுதி

தொடர்ச்சி▲

அவசியமான சூழலையும் சந்தர்ப்பத்தையும் உருவாக்கிக் கொடுக்கும் பொறுப்பு எமக்கு இருக்கின்றது. தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி நிலையிலும் கூட மட்டக்களப்பு மாவட்டத்தின் வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு அவசியமான நிதிகளை ஒதுக்கித் தந்துள்ளார். நாம் அவற்றுக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

நாட்டின் நிர்மாணத்துறை, உற்பத்தித் துறை, விவசாய நவீனமயமாக்கல், மீன்பிடித்துறை, தொழில்நுட்பத் துறை மற்றும் ஏ.ஐ. தொழிநுட்பம் போன்றவற்றை உயர் மட்டத்திற்கு கொண்டு வரக்கூடிய ஆற்றல், அறிவு மற்றும் திட்டமிட்ட அடிப்படையில் பணியாற்றக்கூடிய தலைவராக ஜனாதிபதி இருக்கின்றார். இவற்றை முன்னேற்றும் வேலைத்திட்டங்களை அமுலாக்கக் கூடிய நிர்வாக வாய்ப்பை பெற்றுக்கொடுத்தால் மண்ணை நம்பி வாழும் கிழக்கு மாகாண மக்கள் நிச்சயமாக சொந்தக் காலில் நிற்பார்கள். எமது அழைப்பையேற்று எமது அலுவலகத்திற்கு வருகை தந்தமைக்காக ஜனாதிபதிக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கிறேன்." – என்றார்.

இதேவேளை, முற்போக்குத் தமிழர் கழகத்தின் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான எஸ். வியாழேந்திரனின் இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.

அங்கு கட்சி உறுப்பினர்கள் உட்பட இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுடனும் ஜனாதிபதி சிநேக பூர்வமாக கலந்துரையாடலில் ஈடுபட்டார்.















# வட மாகாண பொலிஸாருக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி

வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் பொலிஸாருக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி ட.சூசைதாசன், யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா, வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.சி.தனபால, யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி சி.பிரணவன், பொலிஸ் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வடக்கின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தடகள விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பரிசில்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.









# இதுவரை தேசிய அடையாள அட்டைகளை பெறாதவர்கள் பெற்றுக் கொள்ள வாய்ப்பு!

நாற்பது வயதிற்கு மேற்பட்ட - இது வரையில் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்கள் அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான கால அவகாசம் இம் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஆள்பதிவுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இந்த தகவலை ஆள்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்துள்ளார்.

பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் இவர்கள் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளது.

முன்னதாக இதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கு கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.இந்த நிலையில், இந்தக் கால அவகாசம் இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களத்தின் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.



# நயினாதீவில் உலக இளைஞர் பௌத்த சங்கத்தினதும் உலக பௌத்த முன்னணியினதும் வருடாந்த மாநாடு!

யாழ்ப்பாணம் நயினாதீவு நாகதீப ரஜமஹா விகாரையில் உலக இளைஞர் பௌத்த சங்க சபையின் 20 ஆவது வருடாந்த மாநாடும் உலக பௌத்த முன்னணியின் 5 ஆவது வருடாந்த மாநாடும் நேற்று நடைபெற்றன.

மத அனுஷ்டானங்களுடன் நேற்றைய மாநாடு ஆரம்பமானது.

பௌத்த அமைப்புகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்தல், இளம் தலைமுறையினரிடையே மதத்தின் விழுமியங்களை மேம்படுத்துதல் உள்ளிட்டவற்றை மையமாகக் கொண்டு நேற்றைய மாநாடுகள் நடைபெற்றன. கலை நிகழ்வுகளும் விழாவை அலங்கரித்தன.மாநாட்டில் நினைவு முத்திரையொன்றும் நேற்று வெளியிடப்பட்டது.

உலக இளைஞர் பௌத்த சங்க சபை மற்றும் உலக பௌத்த முன்னணியின் தலைவர்கள் தமது அமைப்புத் தொடர்பிலும் எதிர்காலத் திட்டம் தொடர்பிலும் மாநாட்டில் உரையாற்றினர்.

நாகதீப ரஜமகா விஹாரையின் விகாராதிபதி நவதகல பதுமகித்தி திஸ்ஸ தேரர், யாழ். மாவட்ட செயலாளர் எம்.பிரதீபன், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க, வட பிராந்திய கடற்படைத் தளபதி ரோஹித்த அபேசிங்க, யாழ்ப்பாண புத்தசாசன பேரவையின் செயலாளர் உள்ளிட்ட பலரும் மாநாடில் பங்கேற்றனர்.



# இந்தியாவோடு பேசுதல்!

இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வியாழக்கிழமை கொழும்பில் இடம் பெற்றது. சுமார் 30 நிமிடங்கள் மாத்திரம் நீடித்த இந்தச் சந்திப்பில், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளடங்கிய எட்டுப் பேர் கலந்து கொண்டனர். தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, புளொட், ரெலோ, தமிழ் மக்கள் கூட்டணி என்ற ஐந்து கட்சிகளைச் சேர்ந்தவர்கள்ஒன்றாகசந்திப்புக்குஅழைக்கப்பட்டிருந்தார்கள். தமிழரசுக் கட்சிக்குள்ளேயே பல பிரிவுகள், பல கோணத்துப் பயணம். நிலைமை அப்படியிருக்க, தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றாக அழைத்துப் பேசுதல் என்பது ஆச்சரியமூட்டும் செய்திதான். ஆனால், ஒரு சம்பிரதாயபூர்வ சந்திப்பு என்ற அளவில் இந்தியா விடயங்களைக் கையாண்டிருப்பதால் பிரச்சினையில்லை. அங்கும், தங்களின் தனிக் குணத்தினை தமிழ்த் தலைவர்கள் பிரதிபலிக்கத் தவறவில்லை. ஒரு சம்பிரதாயபூர்வ சந்திப்பில் கலந்துகொண்டிருக்கிறோம் என்ற எண்ணத்தினை மீறி, மறுபுறத்திலுள்ள ஜெய்சங்கரை பேசுவதற்கோ, பதிலளிப்பதற்கோ இடமளிக்காது, சந்திப்புக்கான ஒட்டுமொத்த நேரத்தையும் தமிழ்த் தலைவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படியான சந்தர்ப்பங்களைக் காணும்போதுதான், இரா. சம்பந்தனின் செயற்பாட்டு அரசியல் வெற்றிடம் உறுத்தலாக வெளித் தெரிகின்றது.

ஜெய்சங்கருடனான சந்திப்பில் சம்பந்தனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவரது வயது மூப்பு உபாதைகளினால் இறுதி நேரத்தில் அவரினால் கலந்து கொள்ள முடியவில்லை. அவர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தால், தமிழ்த் தலைவர்கள் பிரிந்து நின்று தான், தான் என்ற தன்முனைப்பு மனநிலையோடு விடயங்களைப் பேசுவது குறிப்பிட்டளவு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். பருமட்டாக சம்பந்தன் விடயங்களை ஒருங்கிணைத்துப் பேசியிருப்பார். இப்போது, தமிழ்த் தலைவர்கள் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் என்ன செய்தியைச் சொன்னார்கள் என்பது, யாருக்கும் தெளிவில்லை. முப்பது நிமிடச் சந்திப்பில், தமிழ்த் தேசிய அரசியல் அரங்கில் முடிவு காணப்படாத தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை முன்வைத்து நீண்ட நேரம் எடுத்து உரையாடுவதை எப்படி நோக்குவது? முதலில், தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாமும் ஓரணியில் இணைய வேண்டும் என்ற கோரும் தரப்புக்கள், அரசியல் - இராஜதந்திர சந்திப்புக்களில் எவ்வாறு ஒருங்கிணைந்து முடிவுகளை எடுத்து பேசுவது என்பதை கற்பிக்க வேண்டும். மாறாக, அந்தச் சந்திப்புக்களை தங்களின் தனிப்பட்ட அரசியல் முடிவுகளை அறிவிப்பதற்கான களமாக தலைவர்கள் கையாளும் சந்தர்ப்பங்களை தவிர்க்கச் செய்ய வேண்டும். இல்லையென்றால், தமிழ்த் தேசிய அர சியல் தலைவர்களை உள்ளக - அயலக இராஜதந்திர, புலனாய்வுத் தரப்புக்கள் இலகுவாக கையாளத் தொடங்கி விடும். ஏற்கனவே, தமிழ்த் தேசிய கட்சிகளும், அதன் தலைவர்களும் பல தரப்புக்களினாலும் இயக்கப்படுகின்றன என்ற குற்றச் சாட்டுக்கள் உண்டு. அவர்களில் சிலர், தனிப்பட்ட உரையாடல்களில் அதனை வெளிப்படுத்தவும் செய்கிறார்கள். இப்படியான நிலை, தமிழ் மக்களை தொடர்ச்சியாக அரசியல் அனாதைகளாக்கும்.



**புருஜோத்தமன் தங்கமயில்**

ஜனநாயக அரசியலில் கருத்து மோதல்கள் அடிப்படையானவை. எதிர்க்கருத்துக்கள் எழாத அரங்கில், எதேச்சதிகாரம் கோலோச்சத் தொடங்கும். அதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள், அதற்கான தீர்வு தொடர்பிலான உரையாடல் களத்தில் தங்களுக்கு இடையில் பருமட்டான இணக்கப்பாடாவது இருக்க வேண்டும். அதனை, அரசியல் - இராஜதந்திர சந்திப்புக்களில் வெளிப்படுத்த வேண்டும். இதுதான், தமிழ் மக்களுக்கான தார்மீகமாகும். முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னரான கடந்த பதினைந்து ஆண்டுகளில் தமிழ்த் தேசியப் பிரச்சினைகளின் பிரதான பேச்சாளராக அல்லது உரையாடல் களத்தின் தலைவராக சம்பந்தன் செயற்பட்டிருக்கிறார். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக அவர் தளர்ந்து போயிருக்கிறார். அதனால், ஒருங்கிணைந்த ஆளுமையின் வெற்றிடம் உருவாகியிருக்கின்றது. ஏனெனில், அரசியலில் முடிவு எடுப்பதற்கும், அதன் விளைவுகளை எதிர்கொள்வதற்கும் துணிவு வேண்டும். அது தற்போதுள்ள தமிழ்த் தலைவர்கள் பலரிடமும் இல்லாத ஒன்று. சம்பந்தன் அரசியல் தவறுகளை இழைத்திருந்தாலும், 'அடுத்த தீபாவளிக்குள் தீர்வு' என்ற பிரபல அறிவிப்புக்கு உரியவர் என்ற போதிலும், விளைவுகளை எதிர் கொள்ளும் வல்லமையுள்ள தலைவராக தன்னை அடையாளப்படுத்தினார். ஆனால், தற்போதுள்ள தலைவர்களில் அநேகர், வாக்கு அரசியல் கணக்கினை மாத்திரம் மனதில் இருத்திச் செயற்படுகிறார்கள். அவர்களினால், தூர நோக்குள்ள அரசியல் முடிவுகளையோ உரையாடல்களையோ செய்ய முடிவதில்லை. அதனைத்தான், ஜெய்சங்கருடனான சந்திப்பும் வெளிப்படுத்துகின்றது.

இந்தியா தற்போது தென் இலங்கையோடு மிக நெருக்கமாக பயணிக்கின்றது. அதனை, உறுதி செய்வதில் தென் இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளும் கவனமாக இருக்கிறார்கள். கடந்த காலத்தில், ராஜபக்ஷக்கள் இந்தியாவை எதிரியாக முன்னிறுத்தி தேர்தல் பிரச்சாரங்களை முன்னெ

தொடர்ச்சி▼



# இந்தியாவோடு பேசுதல்!

தொடர்ச்சி▲

டுத்திருக்கிறார்கள். ஆனால், அறகலய காலத்துக்குப் பின்னரான ராஜபக்ஷக்களோ, அவர்களின் பொதுஜன பெரமுனவோ இந்தியாவோடு முட்டல் மோதல்களைச் செய்யாது, இணக்கமாக அதுவும் பெரியண்ணனிடம் ஒடுங்கும் தம்பி போன்று செயற்படத் தயாராக இருக்கிறார்கள். வழக்கமாக ராஜபக்ஷக்கள் சீனாவின் விசுவாசிகள் என்பதுதான் வரலாறு. ஆனால், அவர்களின் இறுதி வீழ்ச்சி சீனாவுக்கான அதிவிசுவாசத்தினால் நிகழ்ந்தது என்ற தெளிவு இப்போது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. மறுபுறத்தில், தேசிய மக்கள் சக்தியாக தன்னை அறிவித்துக் கொண்டிருக்கின்ற மக்கள் விடுதலை முன்னணியோ, இந்திய தூதரகத்தின் அழைப்பை மிகப்பெரிய விடயமாக பார்க்கத் தொடங்கிவிட்டது. அதுவும் சீனாவின் செல்லப்பிள்ளை என்ற கட்டத்திலிருந்து இந்தியாவுடனான புது நெருக்கத்தை கொண்டாட்டமாக வெளிப்படுத்துகின்றது. ரணிலோ, சஜித்தோ இந்தியாவை ஒருபோதும் எதிர்நிலையில் நின்று கண்டதில்லை. பல நேரங்களில் இந்தியாவின் ஆணைக்காக காத்திருப்பவர்கள். அப்படிப்பட்ட நிலையில், தென் இலங்கையின் அரசியல் தலைமை என்பது இந்தியாவுடனான நெருக்கத்தை அதிகமாக வெளிப்படுத்தி வருகின்றது. அது, இந்தியாவை ஆளும் பா.ஜ.க.வுக்கும், அவர்களின் நெருக்கமான வர்த்தகர்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. ஆனால், இந்த விடயங்களை புரிந்து கொள்ளாமல், இந்தியா தமிழ் மக்களை கரிசனையோடு பார்ப்பதாக சில தமிழ்த் தலைவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். அரசியல் - இராஜதந்திர நலன்களின் படிதான், யாருக்கு யார் முக்கியமானவர்கள் என்பது முடிவாகின்றது. தென் இலங்கையை கையாளுவதற்காக அதிக தருணங்களில் இந்தியாவுக்கு ஈழத் தமிழர்கள் தேவைப்பட்டிருக்கிறார்கள். ஒரு கருவியாக ஈழத் தமிழர்கள் இந்தியாவுக்கு தங்களின் உண்மையான பலத்தினையும் மீறி உதவியிருக்கிறார்கள். ஆனால், இந்தியாவினால் அதற்கான பிரதிபலன் ஈழத்தமிழர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறதா என்ற கேள்விக்கான பதில் எதிர்மறையாகவே இதுவரையில் இருந்திருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலை முன்வைத்து, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் மேலெழுந்தமைக்கு இந்திய அயலக இராஜதந்திர கட்டமைப்பின் செயற்பாடுகள் இருப்பதான குற்றச்சாட்டுகள் உண்டு. அது, இந்தியா விரும்பும் தென் இலங்கைத் தலைவரின் வெற்றிக்கான வாய்ப்புக்களை உருவாக்கும் போக்கிலானது என்பது வாதம். இலங்கை அரசியலில் வெளிச் சக்திகளின் தலையீடு என்பது காலம் காலமாக இருப்பதுதான். ஆட்சி அதிகாரத்தை தீர்மானிப்பதிலும் அவை பாரிய பங்கினை வகித்திருக்கின்றன. ஏனெனில், பௌத்த சிங்கள பேரினவாதம் அதற்கான வாய்ப்புக்களை தொடர்ச்சியாக உருவாக்கி வந்திருக்கின்றது. அதனை, தென் இலங்கையின் தலைவர்கள் அனைவரும் உணர்ந்தும் இருக்கிறார்கள். அவர்களும் தங்களை நிலை நிறுத்துவதற்கான எந்த வெளிச் சக்தி ஆதரவளிக்கின்றதோ அவர்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். அது, இலங்கை சுதந்திரமடைந்தது முதல் தொடரும் நிலை. தற்போது இலங்கையின் வளங்கள் மீது இந்திய பெரு வணிகர்கள் குறிவைத்திருக்கிறார்கள். அதனை எதிர்க்கும் உள்ளூர் தலைவர்களை அரசியல் அரங்கில் இருந்து அகற்றும் தேவையின் போக்கிலும் இராஜதந்திர நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. தென் இலங்கையை சீனா பெருமளவில் ஆக்கிரமித்துவிட்டது. மீதமுள்ள வளங்களை இந்தியா எடுத்துக் கொள்வதற்கான இசைவை தென் இலங்கை கிட்டத்தட்ட ஒருமுகமாக வழங்கிவிட்டது. இப்படியான நிலையில், வடக்கிலும் கிழக்கிலும் இந்தியப் பெரு வணிகர்களின் எதிர்பார்ப்புக்களுக்கு யார் உறுத்தலாக முன்னால் வருகிறார்களோ அவர்களை அகற்றும் பணி என்பது கனகச்சிதமாக முன்னெடுக்கப்படுகின்றது. தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் என்ற பேரழிவின் பின்னாலும் இந்தியாவை நேச சக்தியாகவே கருதுகிறார்கள். அதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தவும் செய்கிறார்கள். ஆனால், இந்தியா அப்படி எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

அப்படியான சூழலில், இந்தியா அழுத்தம் செலுத்துகின்றது என்பதற்காக எல்லா விடயங்களுக்கும் தமிழ்த் தலைவர்கள் இசைந்து கொடுக்கும் நிலையில் இருந்து மீள வேண்டும். தமிழ் மக்களின் எதிர்கால இருப்புக்கு என்ன அவசியமோ அதனை நோக்கிய பயணத்தில் கவனமாக இருக்க வேண்டும். தென் இலங்கைத் தலைவர்கள் இந்தியாவை பெரியண்ணணாகத்தான் பார்க்கிறார்கள். ஆனால், தமிழ்த் தேசியத் தலைவர்களில் அநேகர், இந்தியாவை தங்களின் ஆண்டானாகப் பார்க்கிறார்கள். இந்த அடிமை மனநிலை என்பது தமிழ்த் தேசிய அரசியலின் சாபக்கேடு. இந்த மனநிலையோடு அரசியல் தலைவர்கள் மாத்திரமல்ல, சமூகத்தில் தங்களை ஆளுமையுள்ளவர்களாக முன்னிறுத்தும் நபர்களும், கல்வியாளர்களும்,சிவில் சமூக அமைப்புக்களும், அரசியல் பத்தியாளர்களும் இருப்பதுதான் வேதனையானது.முதலில் நாம் யாருக்கான அரசியலை முன்னெடுக்கின்றோம் என்ற தெளிவு அவசியமானது. அதனை மறந்து நின்று என்ன அரசியல் பேசினாலும் அதற்காக எவ்வளவு உசுப்பேற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டாலும் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை. முதலில் அதைத்தான் தமிழ்த் தேசிய அரசியல் களம் உணர்ந்து ஒழுக வேண்டும்.







# கேள்விக்குறியாகும் மன்னாரின் எதிர்காலம்

# வாழ ஒரு சதுர அடி நிலம் கூட இனி இல்லை

மனித வாழ்க்கைக்கு இயற்கை மிக அவசியம். ஒரு நாட்டில் முப்பது வீதத்திற்கு மேல் காடாக இருக்க வேண்டும் என்பதே நியதி. மனிதனின் சுகதேகி வாழ்விற்கும், விலங்குகள், பறவைகள் போன்றவற்றின் இருப்புக்கும் காடுகள் அவசியமானவை. அத்துடன் கரியமிலவாயுவை உட்கொள்வதற்கும், மழை வீழ்ச்சிக்கு காரணமாவதுடன் மண்ணரிப்பையும், வெள்ளப்பெருக்கையும் காடுகளே தடுக்கின்றன.

இதில் ஆற்றல் சுற்றோட்டம், உணவு வட்டம், இயற்பியல், மற்றும் வேதியியல் சார்ந்த செயல்பாடுகளும் உள்ளடங்கும்.

சதுப்பு நிலக்காடுகள், பசுமை மரக்காடுகள், இலையுதிர் காடுகள், ஊசி இலை காடுகள் எனப் பலவகை உண்டு. நிலவியல் மற்றும் வனவியல் இருப்புக்கு உட்பட்டவனே மனிதனும். உயிர்களின் வளர்ச்சிக்கு தேவையான எல்லாவற்றையும் இயற்கை தருகிறது. காடுகள், நுண்ணுயிரிகள், ஆறுகள், ஏரிகள், கடற்பகுதிகள், மலைகள், மண்வளம், மேகங்கள், மழைத்துளி இவை இயற்கையின் கொடையே! இதில் தூய இயற்கைவாதம், தத்துவ இயற்கை வாதம், இயற்கைக்கு எதிரானது என மூன்று நிலைகளாக வகுக்கப்பட்டுள்ளது. எனவே இந்த உயிரியல் பன்முகத்தன்மையை பாதுகாக்க வேண்டியது கடப்பாடாகும்.

ஆனால் அதை மன்னாரில் மட்டும் முழுமையாக நடைமுறைப்படுத்த முனைவது வேடிக்கையாகும். மன்னார் மாவட்டம் 2002.05 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பை கொண்டது. ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும், வடக்கிலே அதிக கனிய வளத்தையும் கொண்ட மாவட்டமாகும். ஏழு ஆறுகள், கட்டுக்கரைக்குளம் உட்பட மூன்று மத்திய நீர்ப்பாசன குளங்களும், ஏழு மாகாண நீர்ப்பாசன குளங்களும் 448 கமநலசேவைத் திணைக்களத்துக்கு உட்பட்ட குளங்களும், 186 ஊட்டல் குளங்களும் காணப்படுகின்றன.

இலங்கையிலே அதிக நெல் விளைச்சலிலே இரண்டாவது மாவட்டமாகும். மிக அழகிய கடல் வளமும் தன்னகத்தே கொண்டது. ஒரு காலத்தில் முத்து குளிப்பதற்கு பெயர் பெற்ற இடமாகவும் விளங்கியது. இலங்கையிலே கருவாட்டு உற்பத்தியிலும் சிறந்து விளங்கியது. பனை வளமும் அதிகம் காணப்படுகிறது. அத்துடன் ஒல்லாந்தர் கோட்டை, அல்லிராணி கோட்டை, தென்னாசியாவில் ஆகப்பெரிய சுற்றளவு உள்ள பெருக்க மரம், வெளிச்ச வீடு, தொங்கு பாலம், நாற்பது அடி கல்லறை, திருக்கேதீஸ்வரத்திருத்தலம், மடுத்தேவாலயம் போன்ற சுற்றுலா தளங்களும் காணப்படுகின்றன.

இந்திய போக்குவரவுக்கும் மிகக் கிட்டிய தூரத்தில் உள்ள மாவட்டமும் ஆகும்.

இந்த மாவட்டத்தின் பிரதான தொழில் விவசாயம், மீன்பிடி. ஆனால் தற்பொழுது இரண்டும் சவாலுக்குட்பட்ட நிலையில் உள்ளன. யுத்தம் முடிவுற்ற பின்னர் அரசாங்கம் தமது திணைக்களங்கள் ஊடாக மன்னாரைத் தனது பிடிக்குள் அகப்படுத்தி விட்டது. எதிர்காலத்தில் மனிதன் குடியேற முடியாத அளவில் சட்டக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. ஒரு அங்குல நிலம் கூட அரச பயன்பாட்டு நிலமாக இல்லை.


வி.எஸ்.சிவகரன்

வனத்திணைக்களம், வனவிலங்குகள் திணைக் களமும் எந்த விதமான கட்டுப்பாடுமின்றி, மாவட்ட அதிகாரிகளின் ஆலோசனையுமின்றி, எந்த வித ஒழுங்குமுறைமையும் பின்பற்றப்படாமல் நிலப்பரப்புகளைத் தான்தோன்றித்தனமாக கையகப்படுத்தி அரச வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தியுள்ளன. அவற்றில் கூட தெளிவான வரைபடமோ எல்லைகளோ கோடி காட்டப்படவில்லை.

இடப்பெயர்ந்தவர்கள் மீள்குடியமர்வதற்கு முன்னர் அந்த நிலங்களை அரசத்திணைக்களங்கள் தமக்குச் சாதகமாக மாற்றி விட்டன. இது ஒரு கட்டமைக்கப்பட்ட இன அழிப்பாகும். மன்னார் மாவட்டத்தில் மீள்குடியேற வேண்டிய நான்காயிரம் குடும்பங்களுக்கு மேல் இந்தியாவில் வசிக்கின்றனர். இவர்கள் வரும்போது எங்கே குடியேற்றுவது? மன்னார் மக்கள் எதிர்காலத்தில் பிள்ளைகள் பெறுவதை நிறுத்த வேண்டும். அல்லது வேறு மாவட்டத்திற்கு குடிபெயர வேண்டும். இந்த நெருக்கடிகளுக்குள்ளே காற்றாலை மின் உற்பத்திக்கு காணி சுவீகரிப்பு, கனிய மண் அகழ்வுக்கு காணி சுவீகரிப்பு, தொல்பொருள் திணைக்களத்தின் இடைவிடாத தொல்லைகள் என மக்களை மேலும் மேலும் அச்சுறுத்தலுக்கும், வாழ்வாதார இழப்புக்கும், வாழ்வியல் அசௌகரியத்துக்கும் உள்ளாக்குவது பெரும் தவறாகும்.

தமது மாவட்டத்திலேயே, தனது மண்ணிலேயே, தாம் எந்தவித உரித்தும் இல்லாதவர்களாக, வாடகை வீட்டில் வசிப்பவர்கள் போன்ற அச்சவுணர்வோடு வாழுகின்ற மனோநிலையை மன்னார் மக்களுக்கு அரசாங்கம் திட்டமிட்டு ஏற்படுத்தியிருக்கிறது.

இயற்கையும், கடல் வளமும் அவசியம். அதில் எவருக்கும் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனாலும் மனிதன் உயிர் வாழ முடியாத போது இயற்கை மட்டும் இருந்து எதற்கு பயன்பட போகிறது எனும் கேள்வி எழுகிறது. அரசு சட்டத்தை மட்டுமே நடைமுறைப்படுத்துகிறதே தவிர. மனிதாபிமானத்தையோ, மனித வாழ்வியலின் இருப்பையோ ஒருபோதும் கவனிப்பதில்லை.

மன்னார் மாவட்டம் ஒரு லட்சத்து 99 ஆயிரத்து 600 ஹெக்டேயர் நிலப்பரப்பைக் கொண்டதாகும். இதில் கடல், தரை உட்பட வனத் திணைக்களம், வன விலங்குகள் திணைக்களம் சேர்ந்து 2,21,220 ஹெக்டேயர் நிலத்தை வர்த்தமானி மூலம் காலத்துக்கு காலம் பிரகடனப்படுத்தி கையகப்படுத்தியுள்ளன.

அதில் வனத்திணைக்களத்தினால் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட விவரம்:- நிந்தாவில் 2,0287.66 ஹெக்டேயர், முள்ளிக்குளம் 5,283.77 ஹெக்டேயர், பாலம்பிட்டி 3,498.89 ஹெக்டேயர், மடு 18,026.77 ஹெக்டேயர், மாவில்லு 40,030.62 ஹெக்டேயர், மடு 26,749.32 ஹெக்டேயர், பலகமுனை 300.2 ஹெக்டேயர், அச்சங்குளம் கண்டல் காடு 1,405.8 ஹெக்டேயர், விடத்தீவு கண்டல் காடு 501.92 ஹெக்டேயர், எருக்கலம்பிட்டி கண்டல் காடு 116.2.8 ஹெக்

தொடர்ச்சி▼

# கேள்விக்குறியாகும் மன்னாரின் எதிர்காலம் வாழ ஒரு சதுர அடி நிலம் கூட இனி இல்லை

தொடர்ச்சி▲

டேயர், மூன்றாம் பிட்டி கண்டல் காடு 517.4.2 ஹெக்டேயர், திருக்கேதீஸ்வரம் கண்டல் காடு 328.01 ஹெக்டேயர்.

வனவிலங்குகள் தினணக்களத்தினால் வர்த்தமானி மூலம் அத்தாட்சி படுத்தப்பட்ட நிலங்களின் விவரம்:- மடு தேசிய பூங்கா 63,067 ஹெக்டேயர், ஆதாம் பாலம் கடல் தேசிய பூங்கா 18,990 ஹெக்டேயர், வங்காலை பறவைகள் சரணாலயம் 4,838.9 ஹெக்டேயர், கட்டுக்கரைக்குளம் பறவைகள் சரணாலயம் 3941.2.3 ஹெக்டேயர், விடத்தில்தீவு இயற்கை காப்பகம் 2,90,280 ஹெக்டேயர்,

இதில் 05.06.2024 வர்த்தமானியின் பிரகாரம் 160 ஹெக்டேயர், விடுவிக்கப்பட்டாலும் அதன் வர்த்த மானி பிரசுரத்தில் விவரம் தெளிவாக இல்லை. முழுமையாக விடுவிக்கப்பட்டதா அல்லது 160 ஹெக்டேயர் மட்டும் விடுவிக்கப்பட்டதா என்பது எவருக்கும் புரியவில்லை.

வில்பத்து மிருகங்கள் வசிப்பிடம் 617 ஹெக்டேயர். இதில் பலகமுனை, விடத்தில்தீவு, எருக்கலம்பிட்டி, மூன்றாம்பிட்டி, திருக்கேதீஸ்வரம், மடுத்தேசியப்பூங்கா ஆகியன வனத் திணைக்களமும், வன விலங்குகள் திணைக்களமும் இணைந்து வர்த் தமானி வெளியிட்டுள்ளன. மொத் தம் 64,880.83 ஹெக்டேயர். இதில் காணி விடுவிப்பிற்காக மன்னார் மாவட்ட செயலகத்தால் வனத் திணைக்களத்திடம் 13,020.1 ஹெக் டேயர் கோரப்பட்டுள்ளது. ஆனால் விடுவிக்கப்பட்டது ஆக 1,513.3.1 ஹெக்டேயர். இவை ஏலவே பயன் பாட்டில் உள்ள நிலமாகும். புதிய காணி எதுவும் விடுவிக்கப்பட வில்லை. இதே வேளை 12,801.72 ஹெக்டையரை புதிதாக காடு வளர்ப்பதற்காக வனத்திணைக்களம் கோருகிறது. அத்துடன் 1,218.44 ஹெக்டேயரை கிராமத்திற்கான காடு வளர்ப்பிற்கும் கோரியுள்ளது. வடிவேலுவின் 'கிணத்தை காண வில்லை' என்பது போல் மன்னாரில் 'காணியை காணவில்லை' என தேடும் நிலையையே இந்த புள்ளி விவரங்கள் சுட்டி நிற்கின்றன.

மாவட்டத்தில் மக்கள் பயன்பாட்டில் உள்ள நிலம், ஏறக்குறைய 20 வீதம் என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த புள்ளி விவரங்களின் படி மாவட்டத்தில் இனி ஒரு சதுர அடி நிலம் கூட மக்கள் குடியமர்வதற்கு இல்லை. இருக்கும் நிலத்தில் மாடி வீடுகள் அமைப்பதைத் தவிர வேறு வழியுமில்லை. எதிர்காலத்தில் மிகப்பெரிய சவாலை மன்னார் மாவட்ட மக்கள் எதிர் நோக்கப் போகிறார்கள்.

கடல் பகுதிகளும் கூட வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் கடலில் மீன் பிடிப்பதற்கும் தடை விதித்தாலும் ஆச்சரியத்துக்கு இடமில்லை.

இந்த ஆண்டு நாட்டில் உணவு உற்பத்தி வெறும் 54வீதமே. இவ்வாறு அரசாங்கம் மக்களுக்கு நில ரீதியாக நெருக்கடி கொடுத்தால் நாட்டில் எப்படி விவசாய செய்கை மேம்படுத்தப்பட்டு உணவு உற்பத்தி அதிகரிக்கும்? வறுமை தாண்டவம் ஆடு வதை தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. எனவே இதனால் மன்னாரின் அபிவிருத்தி முழு மையாக தடைப்படுகின்றது.

83 குளங்கள் வனத்திணைக்களத்தாலும், 26 குளங்கள் வனவிலங்குகள் திணைக்களத்தாலும், 33 குளங்கள் இரண்டு திணைக்களங்களாலும் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இதற்குள் எந்த விதமான அபிவிருத்தி செய்ய





முடியாத நிலை ஏற்படுகின்றது. அதனால் அக்குளங் களின் கீழ் உள்ள விவசாயம் முழுமையாக பாதிக்கப்படுகிறது.

மன்னார் மக்களுக்கான இயற்கை வள குடிதண்ணீருக்காக அடையாளப்படுத்தப்பட்ட கல்லாறு குடிதண்ணீர்த் திட்டம், பள்ளி முனை கடல் ஆழப்படுத்துதல், இலவங்குளம் பாதை திறப்பு, மேய்ச்சல் தரவை ஒதுக்கீடு, நீதிமன்ற வளாகம் இடமாற்றம், கூராய் வெள்ளாங்குளம் வீதி புனரமைப்பு, பரப்புக்கடந்தான் பெரியமடு வீதி புனரமைப்பு போன்றவை எல்லாம் இந்த அரச திணைக்களங்களின் தம்மிஷ்டப்படியான காணி ஆக்கிரமிப்பினால் தடைப்பட்டுப் போயுள்ளன.

இது மட்டுமன்றி கால்நடைக்கு மேய்ச்சல் நிலம் இன்மையால் கால்நடைகளைப் பண்ணையாளர்கள் விற்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் எதிர்காலத்தில் எந்த அபிவிருத்தியும் செய்வதற்கு உரிய நிலச் சூழல் அமைப்பு இல்லை. இந்த விடயத்தை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் புரிந்து கொண்ட வர்களாகத் தெரியவில்லை. சாமானிய மக்களுக்கு இதனால் ஏற்படுகின்ற விளை வுகள், சவால்கள் குறித்தும் எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற தாக்கங்கள் பற்றியும் எந்த விதமான புரிதலும் இல்லை.

ஆகவே மன்னார் மண்ணின் எதிர்காலம் கேள்விக்குறியே! அறிவற்ற உணர்ச்சி அரசியல் எதைச் சாதித்தது? மன்னார் மக் கள் மூன்று தசாப்தத்திற்கும் மேலாக அறி வுபூர்வமாக பிரதிபலிக்கும் அரசியல் தெரிவுகளை மேற்கொள்ளாமல் மதவாத சகதிக்குள் சிக்குண்டு உணர்வடிமைகளாக இருப்பதனால் மன்னாரின் எதிர்காலம் எப்படி இருக்க போகிறது? எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை. இந்த மாவட்டத்தை காப்பாற்ற போவது யார்...?



# பிரச்சினைகளை நீடிக்கச் செய்வதே தமிழ் அரசியல் தரப்பினரின் திட்டம்

## ஈ.பி.டி.பி. ஊடகப் பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டு




தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான தீர்வுகளைப் பெறுவதற்கு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனத் தமிழ் அரசியல் தரப்பினர் உதட்டளவில் பேசினாலும் உள்ளத்தில் இப்பிரச்சினையை நீடிக்கச் செய்வதே இவர்களது எண்ணமாக உள்ளது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கருடனான சந்திப்பில் மாறுபட்ட நிலைப்பாட்டையே தமிழ் அரசியல் தலைவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இது தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தொடர்ந்தும் முட்டுக்கட்டையாகவே இருக்கும்.

அத்துடன் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான தீர்வுகளைப் பெறுவதற்கு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என உதட்டளவில் பேசினாலும் உள்ளத்தில் இப்பிரச்சினையை நீடிக்கச் செய்வதே இவர்களது எண்ணமாக உள்ளது.

இதேநேரம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் மும்முனைப் போட்டி நிலவும் என்ற கருத்து நிலவும் சூழலில் அவ்வேட்பாளர்கள் அரமைப்பில் உள்ள மாகாண முறைமையை முழுமையாக நடைமுறைப்படுத்த சமிக்ஞையை காட்ட முனைகின்ற போதும், தமிழ் தரப்பு அதனை புகழ்ந்து பேசுவது போன்று வெளிப்படுத்தினாலும், இந்திய வெளிவிவகார அமைச்சரின் முன் நிலையில் பிளவுபட்ட நிலையிலேயே கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்துள்ளனர்.

இது இந்தியாவின் பங்களிப்பை கோருவது போன்று காட்டிக்கொண்டாலும் எமது அரசியல் பிரச்சினை தொடர்பில் அவர்களிடத்தில் தீர்க்கமான பார்வை ஒன்றும் இல்லாததையே வெளிக்காட்டி நிற்கின்றது.

ஆயினும் நீண்டகாலமாக எமது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வலியுறுத்திவருகின்ற 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் ஊடான மாகாண முறைமை ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. அதனை ஆரம்பமாக வைத்து முழுமையாகச் செயற்படுத்த வேண்டும் என்பதே தற்போதுள்ள நிலைமையில் பொருத்தமாக அமையும்.

எனவே பிளவுபட்டுள்ள நிலையில் உள்ள நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகள் மக்களின் நலனிலிருந்து சிந்திக்க வேண்டும். கிடைக்கின்ற வாய்ப்புக்களை எமது மக்களின் நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அத்துடன் அரசமைப்பில் இருக்கின்ற அதிகாரங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த இணக்கங்கள் கூறப்படுகின்ற நிலையில் இதய சுத்தியுடன் நடைமுறைப்படுத்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற தமிழ் கட்சிகள் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவார்களா என்றும் கேள்வியும் எழுந்துள்ளது. – என்று குறிப்பிட்டார்.

# மலையக நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் வெகுவாக உயர்வு

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழையால் நீர் ஏந்து பகுதியில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களின் நீர் மட்டமமும் வெகுவாக உயர்ந்தது உள்ளது.

அதன் படி மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் நேற்று மதியம் 4 மணிவரை 113அடி06 அங்குல உயரத்துக்கு நீர் நிறைந்து உள்ளது இன்னும் 6 அடி 5 அங்குலம் நீர் நிறைய உள்ளது.

காசல்ரீ நீர் தேக்கத்தின் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்தது உள்ளது.

கென்யோன் நீர் தேக்கத்தின் நீர் மட்டம் 54 அடி 9 அங்குலம் நீர் நிறைந்து உள்ளது. இன்னும் 2 அடி 3 அங்குலம் நீர் நிறைய உள்ளது.

விமலசுரேந்திர நீர் தேக்கத்தின் நீர் மட்டம் 91 அடி 4 அங்குலம் நீர் நிறைந்து உள்ளது. இன்னும் 2 அடி 8 அங்குலம் நீர் நிறைய உள்ளது.

லக்சபான நீர் தேக்கத்தின் நீர் மட்டம் 94 அடி 1 அங்குலம் நீர் நிறைந்து. உள்ளது இன்னும் 2 அடி 11 அங்குலம் நீர் நிறைய இடம் உள்ளது என லக்சபான நீர் மின் உற்பத்தி நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ந்து சீரற்ற காலநிலை காரணமாக மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் இடை இடையே கனத்த மழையுடன் கடும் காற்று வீசுவதால் அதிகளவில் குளிர் நிலவி வருகிறது.

பெருந்தோட்ட தொழிலாளர் கள் மற்றும் பண்ணையாளர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்க பட்டுள்ளது.



# மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரிப்பு

**(பாறுக் ஷிஹான்)**

நாட்டின் பல பகுதிகளில் அண்மைக் காலங்களில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் உள்ளிட்ட இதர காரணங்களினால் நாடளாவிய ரீதியில் மரக்கறிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் உள்ள வாராந்த சந்தைகள், வீதியோர மரக்கறி விற்பனை நிலையங்கள் ஒரு கிலோகிராம் போஞ்சியின் மொத்த விற்பனை விலை 550 முதல் 750 ரூபா வரையிலும், ஒரு கிலோகிராம் கறி மிளகாய் மற்றும் மிளகாய் 500 முதல் 650 ரூபா வரையிலும், ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 350 முதல் 500 ரூபா வரையிலும் உயர்ந்துள்ளது. ஏனைய மரக்கறி வகைகளின் விலைகளும் அதிகளவில் உயர்ந்த நிலையில் உள்ளன எனப் பாவனையாளர் கூறுகின்றனர்.

அத்துடன் ஒரு கிலோகிராம் கரட் 460 ரூபாவிற்கும், ஒரு கிலோ கிராம் வெண்டைக்காய் 500 ரூபாவிற்கும், இஞ்சி ஒரு கிலோ 3,500 ரூபாவிற்கும், தேசிக்காய் ஒரு கிலோ 1800 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் லீக்ஸ் மற்றும் தக்காளி உள்ளிட்ட ஏனைய மரக்கறிகளின் விலையும் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது.

இதன்படி கடந்த நாள்களில் 100 ரூபாவிற்கு குறைவாக விற்பனை செய்யப்பட்ட மரக்கறிகள் இன்று 500 ரூபாவைக் கடந்துள்ளன என வர்த்தகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக பயிர்கள் சேதமடைந்துள்ளமையால் மரக்கறிகளின் விலை இவ்வாறு அதிகரித்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதன் காரணமாகவே நாடளாவிய ரீதியில் இவ்வாறு மரக்கறிகளின் விலைகள் அதிகரித்து வருகின்றன என அவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் சீரற்ற காலநிலை காரணமாக தற்போது மரக்கறிகள் நுகர்வோரின் தேவைக்கு ஏற்ற வகையில் வரத்து இல்லாததால் காய்கறி விலை மேலும் உயர்ந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதை விட தம்புள்ளை மற்றும் நுவரெலியாவில் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் அம்பாறை மாவட்டத்திற்கு கொண்டு வரப்படும் மரக்கறிகளின் விலைகளும் போக்குவரத்து செலவு உள்ளிட்ட இதர செலவினாலும் அதிகரித்துள்ளன என்றும் இந்த விலைச் சுமையினை நுகர்வோர் சுமக்க வேண்டியிருப்பதாகவும் வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் இவ்வாறு மரக்கறிகளின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளமைக்கு சில மாபியாக்களும் இடைத்தரகர்களும் காரணம் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இது தவிர, மற்றுமொரு காரணம் சந்தையில் வெளிப்படைத்தன்மை இல்லாமை மற்றும் பல பிரச்சினைகள் காரணமாகவே மரக்கறிகளின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளன.

எனவே சந்தையில் சில வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வந்தால் மாத்திரமே மரக்கறி விலைகளைக் குறைக்க முடியும் என்று கூறப்படுகின்றது.

மேலும் மரக்கறிகளின் விலை அதிகரிப்பு காரணமாக நுகர்வோர் மரக்கறிகளை கொள்வனவு செய்வதை தவிர்த்து வருகின்றனர். உள்ளூர் சந்தையில் மரக்கறிகளின் திடீர் விலை அதிகரிப்பு தொடர்பில் நுகர்வோர் அதிகார சபை இவ்விடயத்தை ஆராய்ந்து விலையை கட்டுப்படுத்த உடனடி தீர்வுகளை வழங்க முன்வர வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் சில வியாபாரிகள் பழுதடைந்த மரக்கறிகளை குறைந்த விலைகளில் விற்பனை செய்கின்றனர். வேறு சிலரோ புதிய மரக்கறி வகைகள் என அவற்றைக் கூறி அதிக விலைக்கு நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றனர்.

எனவே இந்த மாஃபியாவை முறியடிக்க நடவடிக்கை எடுப்பதுடன் பொருத்தமற்ற முறையில் விலையை அதிகரிக்கும் வியாபாரிகளுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# 'மவ்பிம' ஜனதா கட்சியில் சேர்ந்தார் அருண் சித்தார்த்

மவ்பிம ஜனதா கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளராக அருண் சித்தார்த் நேற்று நியமிக்கப் பட்டுள்ளார்.

மவ்பிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தலைமையில் கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் போதே, மவ்பிம ஜனதாக் கட்சியின் மாவட்ட பிரதான அமைப்பாளராக அருண் சித்தார்த் நியமிக்கப்பட்டார்.

அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியில் தாம் இணைந்துகொண்ட போதிலும், ஒடுக்குமுறைக்கு எதிரான தீர்வுகள் அந்தக் கட்சியில் கிடைக்கா ததால், மவ்பிம ஜனதா கட்சியில் இணைவதற்கு தீர்மானித்தேன் என அருண் சித்தார்த் கூறினார்.

# குப்பைகளை ஏற்றி வந்த டிராக்டர் நூறு அடிப் பள்ளத்தில் வீழ்ந்தது!

## சாரதி படுகாயம்; கெப்பட்டிபொலவில் சம்பவம்



(ஆ.ரமேஸ்)

நுவரெலியாவிலிருந்து வெலிமடை பகுதியை நோக்கி பயணித்த டிராக்டர் ஒன்று கெப்பட்டிபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரேந்தபொல பகுதியில் சுமார் நூறு அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் டிராக்டரைச் செலுத்தி சென்ற சாரதி பலத்த காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் நுவரெலியா மாவட்ட வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா பகுதியிலிருந்து குப் பைகள் ஏற்றிச் சென்ற டிராக்டரே ரேந்தபொல பகுதியில் பெய்து வரும் அதிக மழைக்காரணமாக வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்து தொடர்பான விசார ணைகளை கெப்பட்டிபொல பொலி ஸார் மேற்கொண்டு வருகின்ற னர்.இதேசமயம், கடந்த வியாழக்கிழமை நுவரெலியா – வெலிமடை பிரதான வீதியிக் ரேந்தபொலை பகுதியில் வீதி ஓரத்தில் பஸ்ஸிற்காக காத்திருந்த 50 வயதுடைய பெண் ஒருவர் மீது கார் ஒன்று மோதி விபத்து சம்பவித்துள்ளது.

விபத்துக்குள்ளான பெண் கடு மையான காயங்களுடன் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட் டுள்ளார்.

அதேநேரம் விபத்துக்கு காரணமான கார் சாரதியை கெப்பட்டிபொல பொலி ஸார் கைது செய்துள்ளமையும் குறிப் பிடத்தக்கது.





# அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் கண்டியில் இடம்பெற்ற இளைஞர்கள் மாநாடு

(பொகவந்தலாவ நிருபர்: சதீஸ்)

மலையக மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு 'நாம் - 200' வேலைத் திட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ள 'இளைஞர்களின் எழுச்சி' எனும் தொனிப்பொருளில் இளைஞர் மாநாடு கண்டியில் அமைந்துள்ள இலங்கை தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்றது.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் பங்கேற்புடன்- AIESEC தொண்டர் அமைப்பின் ஒத்துழைப்புடன் இந்த இளைஞர் மாநாடு இடம்பெற்றது.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்டகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் விசேட விருந்தினராகப் பங்கேற்றிருந்த இம் மாநாட்டில் பல்வேறு பிரமுகர்கள் கலந்துக்கொண்டனர்.

அங்கு இளைஞர்கள் மத்தியில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் உரையாற்றும் போது கூறியவை வருமாறு:-

நாம் எப்பொழுதுமே பெரிதும் எதிர்பார்ப்பது அரச வேலை வாய்ப்புகளை மாத்திரமே. ஆனால் அது தவறல்ல. தனியார் துறை வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் முயற்சியாண்மை போன்றவற்றில் ஈடுபடுவது எதிர்காலத்தின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதனை நாம் உனர வேண்டும்.



குறிப்பாக இந்த காலக்கட்டத்தில் பெருந்தோட்ட துறையினரைப் பொறுத்தவரையில் 30 சதவீதமான மாணவர்களுக்கு மாத்திரமே தரமான கல்வி கிடைக்கின்றது. அதேபோல் குறைந்த அளவிலான தொழில் வேலைவாய்ப்புகளே காணப்படும் இந்த சமயத்தில் நாம் அதனை எவ்வாறு பயன்படுத்தி வெற்றிக்கொள்ள வேண்டும் என்பதனை எதிர்கால இலக்காக கொண்டு பயணிக்க வேண்டும். எமது சமுதாயம் மத்தியில் ஒரு விடயத்தை வெற்றிக் கொள்ள - அதாவது தேர்வு செய்து கொள்ள - பிறரை நாட வேண்டிய சூழ்நிலையே காணப்படுகிறது.

ஆனால் அது ஒன்றும் தவறல்ல. நம்மைப் பொறுத்தவரையில் அரச வேலைவாய்ப்பைத் தவிர்த்து சமூக முயற்சி, சமுதாய முயற்சி மற்றும் சுயத்தொழில் முயற்சி ஆகியவற்றை இலக்காக கொண்டு பயணிப்போமானால் எமது எதிர்காலமானது சுபீட்சமாக அமையும் என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

முதலில் நம்மை நாம் மதித்து பழக வேண்டும். பின்னர் நாம் ஒற்றுமையாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவோமேயானால் அனைத்து வகையான வெற்றிகளையும் பெறக்கூடியதாக காணப்படும்.

என்றும், எப்பொழுதும் நான் உங்களுடைய பிரதிநிதி. உங்களுக்காகவே நான் சேவை செய்யத் தயாராக இருக்கின்றேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் உங்களைக் கைவிட மாட்டேன், உங்களுக்கு உறுதுணையாக நிற்பேன் என்று தெரிவித்தார்.

இம் மாநாட்டில் அமைச்சர் ஜீவன் தொண்டமான், அவரின் அமைச்சின் செயலாளர் முகமது நபீல், இலங்கையின் தொழில்முறை மோட்டார் பந்தய பிரபல வீரர் டிலந்த மாலகமுவ, இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் பீடாதிபதி மாதவ ஹேரத், இலங்கை பிஸ்கட் நிறுவன (CBL) முதன்மை இயக்குனர் சமித்த பெரேரா அமைச்சின் உயர் அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# யாழ் போதனா வைத்தியசாலையில் நோயாளியிடம் மோதிரம், பணம், கைப்பை சுருட்டிய பலே கில்லாடி!

## கண்காணிப்புக் கமராக் காட்சியில் முழு விவரம்

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நோயாளி ஒருவரிடம் சகஜமாக கதைத்து அவருடைய மோதிரம், சிறுதொகைப்பணம் மற்றும் கைப்பை போன்றவற்றை களவாடிச் சென்ற நபர் கண்காணிப்பு கமராவின் மூலம் அடையாளம் காணப்பட்டுள் ளார் என தெரிவித்த வைத்தியசாலை பணிப்பாளர், அந்த நபர் தொடர்பாக விவரம் தெரிந்தால் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கோ வைத்தியசாலை நிர்வாகத்துக்கோ தெரிவிக்குமாறு அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் செய்திக் குறிப் பொன்றை வெளியிட்டு வைத்தி யசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, பொதுமக்களுக்குஅறிவுறுத்தியுள்ளார்.

மேலும் அந்தச் செய்தி குறிப்பில், யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த புதன்கிழமை மதியம் பார்வை யாளர் நேரத்தில் நூதனமான முறை யிலே திருட்டுச் சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

அன்றைய தினம் சத்திர சிகிச்சை விடுதியில் அனுமதிக்கப்பட்ட நோயாளி ஒருவரிடம் சகஜமாக கதைத்து அவ ருடைய மோதிரம் சிறுதொகைப்பணம் மற்றும் கைப்பை போன்றவற்றை களவாடிச் சென்ற நபர் CCTV யில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சத்திர சிகிச்சை விடுதியில் அனு மதிக்கப்பட்ட நோயாளி ஒருவரிடம் குறிப்பிட்ட நபர் சென்று சகஜமாக கதைத்து குறிப்பிட்ட நோயாளியை X Ray கதிர்ப் படம் எடுக்க போக வேண்டும் எனவும் நீங்கள் உணவ ருந்தி குளித்து விட்டு ஆயத்தமாக இருங்கள் என்று கூறி அவரை X Ray கதிர்ப்படம் எடுக்கும் இடத்திற்கு கூட்டிச் சென்று நோயாளி அணிந்தி ருந்த மோதிரம், சிறுதொகைப் பணம் மற்றும் கைப்பை போன்றவற்றை களவாடிச் சென்ற சம்பவம் நடைபெற் றுள்ளது.

குறிப்பிட்ட நபர் CCTV மூலம் அடை யாளம் காணப்பட்டுள்ளார். இவரை பற்றிய விவரங்கள் தெரிந்தவர்கள் யாழ் பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது வைத்தியசாலை பணிப்பாளர் காரியாலயத்திற்கோ தெரியப்படுத்




துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின் றீர்கள்.

மேலும் வைத்தியசாலைக்கு அனு மதிக்கும் நோயாளிகள் தங்க ஆபர ணங்களையோ பெறுமதியான பொருள்களையோ கொண்டு வர வேண்டாம் எனவும் தெரியாத நபர்க ளுடன் அவதானமாக இருக்கவேண் டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள் ளது.




# ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த கொழும்பு வாசி கல்முனையில் கைது!

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப்பொருளைத் தம் வசம் வைத்திருந்தவர் எனக் கூறப் படும் கொழும்பு புற நகர் பகுதியை சேர்ந்த சந்தேக நபரைக் கைது செய்த விசேட அதிரடிப்படையினர் அவரை சட்ட நடவடிக்கைக்காக கல்முனை தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர பகுதியில் உள்ள பிரபல உல்லாச விடுதிக்கு அருகில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக் கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றை அடுத்து அங்கு சென்ற கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலை மையிலான விசேட அதிரடிப்படையி னர் சுமார் 9 லட்சம் ரூபா பெறுமதி யான ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்தவரைக் கைது செய்தனர்.

கைதான நபர் கொழும்பு புற நகர் பகுதியை சேர்ந்த 47 வயது டையவர். சந்தேக நபர் வசம் இருந்து ஐஸ் போதைப்பொருள் 25 கிராம் 150 மில்லிகிராம் விசேட அதிரடிப்படை யினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் சான்றுப் பொருட்களுடன் கல்முனை தலை மையக பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காகப் பாரப்படுத்தப் பட்டார்.

# கள்ளச் சாராயத்தை ஒழிக்க முதல்வர் பிறப்பித்த உத்தரவு

கள்ளச் சாராய உயிரிழப்புகளை தடுக்க கடந்த ஆண்டே முதல்வர் பிறப்பித்த உத்தரவுகள், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பின்பற்றப்படாத நிலையுள்ளது.

கடந்த ஆண்டு நடந்த சாராய உயிரிழப்புகளை தொடர்ந்து, முதல்வர் ஸ்டாலின் பலவித உத்தரவுகளை வெளியிட்டார்.

அதில் குறிப்பாக, கள்ளச் சாராயம் விற்றால் குண்டர் தடுப்பு சட்டம் பாயும். 10581 என்ற கட்டணமில்லா எண்ணில் மக்கள் புகார் அளிக்கலாம்.

மாவட்ட மதுவிலக்கு அலுவலகம், டி.எஸ்.பிக்கள் அவர்களின் வாட்ஸ்ஆப் எண்களை அறிவிக்க வேண்டும். புகார் மீதான நடவடிக்கை குறித்து மது விலக்கு அமலாக்கத் துறை கூடுதல் டி.ஜி.பி. கண்காணிக்க வேண்டும். இந்த நடவடிக்கை குறித்த வார அறிக்கையை, ஒவ்வொரு திங்கள் கிழமையும், உள்துறை செயலர் வழியாக முதல்வர் அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும். ஆட்சியர் தலைமையில் வாராந்திர கூட்டம் நடத்த வேண்டும் என உத்தரவிட்டிருந்தார்.



முதல்வரின் எந்த உத்தரவும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இதுவரை பின்பற்றவில்லை. எதுவுமே பின்பற்றாததால் கள்ளச்சாராய சம்பவம் நிகழ்ந்துள்ளது. கடந்த முறை பிறப்பித்த உத்தரவை இனியாவது மாவட்ட நிர்வாகங்கள் கடைபிடிக்குமா, இதனை தமிழக அரசு கண்காணிக்குமா என கேள்வி எழுந்துள்ளது.

# தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏன் கள்ளக்குறிச்சி செல்லவில்லை

## அண்ணாமலை கேள்வி

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏன் கள்ளக்குறிச்சி செல்லவில்லை என்று பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று கோவையில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“மக்கள் பிரச்சினைக்காக, கள்ளச்சாராய இறப்புக்காக ஆர்ப்பாட்டம் நடத்த முறைப்படி பொலிசாருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. கடைசி நேரத்தில் அனுமதி மறுக்கப்பட்டு கட்சியினர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தி.மு.க. அரசு அச்சப்படுவதைக் காண்பிக்கிறது. இதுபற்றி பேசக் கூடாது என தி.மு.க. நினைக்கிறது. தமிழகத்தில் மட்டும்தான் நூலகங்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை விட இரண்டரை மடங்கு டாஸ்மாக் கடைகள் அதிகம் உள்ளன. கள்ளச் சாராய இறப்பு என்று சொல்வதை விட கள்ளச் சாராயத்தால் தி.மு.க. நடத்திய படுகொலையாகும்.

வளர்ந்த தமிழகம், திராவிட மாடல் அரசு என இந்தியாவுக்கு தமிழகம் உதாரணம் என்று சொல்லிய காலம் போய்விட்டது. இன்று இந்தியாவின் முன்பு தமிழகம் தலைகுனிந்து நிற்கிறது. கள்ளச்சாராய இறப்புகள் ஓராண்டு அல்ல, இரண்டாவது ஆண்டாக நடைபெறுகிறது. இதை கண்டித்து பேச உரிமை மறுக்கப்படுகிறது. ஜனநாயகத்துக்கு எதிரான கட்சி தி.மு.க. அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரான கட்சி தி.மு.க.

தமிழக ஆளுநரை தொலைபேசியில் அழைத்து புகார் தெரிவித்தேன். பா.ஜ.கவின் கருத்து சுதந்திரத்தை தி.மு.க. பறித்துக் கொண்டிருக்கிறது. தனி மனிதன் பேசும் சுதந்திரத்தை தி.மு.க. தடுக்கிறது. கள்ளச் சாராய விவகாரத்தில் தி.மு.கவுக்கு இருக்கும் தொடர்பையும் ஆளுநரிடம் அறிக்கையாக சமர்ப்பிக்க உள்ளோம். தி.மு.க. அரசு தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டுமா என்பது குறித்த கேள்வியை ஆளுநரிடம் முன்வைக்க உள்ளோம்.



தி.மு.க. தலைவர்களுக்கும், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கும் உள்ள தொடர்பை விசாரிக்க சி.பி.ஐ. விசாரணை தேவைப்படுகிறது. சி.பி.ஐ. விசாரணை நடந்தால்தான் முழு உண்மை வெளியே வரும்.

தமிழக முதல்வர் ஏன் கள்ளக்குறிச்சி செல்லவில்லை? முதல்வரால் அங்கு செல்ல முடியாது. ஆளும் முதல்வரை கள்ளக்குறிச்சிக்கு விடாத சூழல் நடந்துள்ளது. தமிழகத்தில் கள்ளச் சாராயத்தை கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். கள்ளச் சாராய விவகாரம் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் எதிரொலிக்க வேண்டும்” – என்றார்.

# கள்ளச் சாராய வழக்கில் இதுவரை 11 பேர் கைது

தமிழகத்தை உலுக்கிவரும் கள்ளக்குறிச்சி விஷச் சாராய சம்பவத்தில் தொடர்புடைய 11 பேரை சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களது பின்புலம் குறித்து முக்கியத் தகவல்கள் தெரியவந்துள்ளன.

கள்ளக்குறிச்சி கருணாபுரம், மாதவச்சேரி ஆகிய பகுதிகளில் கள்ளச் சாராயம் என்ற பெயரில் மெத்தனால் கலந்த விஷச் சாராயத்தை விற்பனை செய்ததை வாங்கி அருந்தியவர்களில் 54 பேர் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. ஏ.டி.எஸ்.பி. கோமதி தலைமையிலான தனிக்குழுவினர் கடந்த 4 தினங்களாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் கருணாபுரத்தில் கள்ளச்சாராயம் விற்பனை செய்ததாக கண்ணுக்குட்டி என்ற கோவிந்தராஜ், அவரது மனைவி விஜயா, அவரது சகோதரர் தமோதரன், இவரது மனைவி சந்திரா ஆகியோரை கைதுசெய்து கள்ளக்குறிச்சி தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி கடலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

இதையடுத்து, அடுத்தக் கட்ட விசாரணை நடத்திய பொலிஸார், இந்த வழக்கில் முக்கிய குற்றச்சாட்டுக்குள்ளானவராக கருதப்படும் சேஷசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த சின்னத்துரை என்பவரை, பண்ருட்டி அருகே கைது செய்தனர். இதனைத் தொடர்ந்து, அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், மெத்தனால் விற்பனையில் தொடர்புடைய சங்கராபுரம் விரியூரைச் சேர்ந்த ஜோசப்ராஜா என்பவரையும் கைது செய்துள்ளனர்.

தொடர்ந்து ஜோசப்ராஜா அளித்த தகவலின் பேரில் விரியூர் லூர்துசாமி, சூசைநாதன், மாதவச்சேரி ராமர் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த வழக்கில், மரக்காணத்தைச் சேர்ந்த மதன்குமார் என்பவரும், கடலூர் மாவட்டம் தம்பிப்பேட்டையைச் சேர்ந்த ராஜா என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மதன்குமார் என்பவர் கடந்த ஆண்டு விழுப்புரம் மாவட்டத்தில் எரி சாராயம் அருந்தி 27 பேர் உயிரிழந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வழக்கில் இதுவரை 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



## சீனாவில் கடும் மழை

# வெள்ளத்தில் மூழ்கும் நகரங்கள்; பலர் பலி!

சீனாவில் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 47 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, தெற்கு சீனாவின் குவாங் டாங் மாகாணத்தில் கனமழை பெய்த தால், வரலாறு காணாத வெள்ளம் மற் றும் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் பிங்யுவான் கவுண்டியில் உள்ள 8 நகரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், நூற்றுக்கும் மேற் பட்ட பாலங்கள் சேதமடைந்துள்ளதுடன் விளைநிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனையடுத்து மெய்ஷோவு நகரின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட மாவட்டம் ஒன்றில் 38 பேர் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தனர் என தெரிவிக்கப்படு கின்றது.

மேலும், அந்தப் பகுதியின் வேறு இடங்களில் 9 பேர் உயிரிழந்தனர் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந் தது.

## அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு: மூவர் உயிரிழப்பு; பலர் காயம்




அமெரிக்காவின் ஆர்கன்சாஸ் மாநிலத்தின் பல பொருள் அங்காடி ஒன்றில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

இந்த சம்பவத்தின் போது மூவர் உயிரிழந்துள்ளதுடன் இரண்டு பொலிஸார் உட்பட 10 பொதுமக்கள் காயமடைந் துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் துப்பாக் கிதாரியும் காயமடைந்துள்ளதாக ஆர்கன்சாஸ் மாநில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, காயமடைந்த சந்தேகநபர் தற்போது பொலிஸாரின் கண்காணிப்புடன் சிகிச்சை பெற்று வரு கின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கி சூட்டு தாக்குதலுக்கான காரணங்கள் இன்னும் வெளியாகவில்லை.

அமெரிக்கத் துப்பாக்கி வன்முறை பதிவேடுகள் என்ற அமைப்பு, 2024 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் இதுவரை 234 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என அறிவித்துள்ளது.

இதேவேளை, அமெரிக்காவில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் 21 பாரிய துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகி யுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

## பங்களாதேஷ் பிரதமர் இந்தியாவிற்கு விஜயம்



இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டு பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினா நேற்று இந்தியா சென்றுள்ளார்.

இதன்போது இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து அவர் கலந்துரையாடியுள்ளார் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு நாடுகளினதும் உறவுகளை மேலும் வலுப் படுத்துதல், நீர்வளம், வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத் தப்பட்டுள்ளது.

அதேநேரம், பங்களாதேஷில் இருந்து சிகிச்சைகளுக் காக இந்தியா செல்வோருக்கு எளிதில் விசா வழங்குவ தற்கான ஈ-விசா முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பங்களாதேஷின் வடமேற்கு பகுதி மக்க ளின் நன்மைகருதி ரங்க்பூர் பகுதியில் புதிய இந்திய தூதரகம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித் துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.06.2024

## மேஷம்

உங்களிடம் காணப்படும் நேர்மறையான எண்ணம் காரணமாக இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகள் பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் போக்கில் இருக்கும் உறுதி காரணமாக நீங்கள் இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பீர்கள். கையிலுள்ள பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## ரிஷபம்

நீங்கள் இன்று சற்று மந்தமாக செயல்படுவீர்கள். சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம். இன்று நம்பிக் கையுடன் செயல்படுங்கள்.

உங்கள் பணியின்போது சில ஏமாற்றங்களையும் தடைகளையும் சந்திப்பீர்கள். உங்கள் சகபணியாளர்களுடனான தொடர்பும் சுமூகமாக இருக்காது.

உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதங்கள் செய்ய நேரலாம் இதனை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். இன்று செல வினங்களை தவிர்க்க இயலாது. உங்கள் செலவுகளை கட்டுப்படுத்துவது சிறந்தது. உற்சாகமான போக்கு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். உங்கள் செயல்களில் கவனம் தேவை. இன்று நீங்கள் பதட்டப்படுவதை தவிர்க்க வேண்டும்.

பணியில் உங்கள் சகபணியாளர் களால் சில தொல்லைகளை எதிர் கொள்வீர்கள். பொறுமையாக பணியை மேற்கொள்ளுங்கள்.

தகவல் பரிமாற்ற குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வேறுபாடுகளை சரி செய்து கொள்ள வேண்டும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை சமாளிக்க நீங்கள் பணம் கடன் பெறுவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.

## கடகம்

உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். இதனால் அமைதி இழப்பீர்கள். பிரார்த் தனை மற்றும் இசை கேட்பதற்கு நேரம் ஒதுக்குவதன் மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.

பணியில் சில சவால்களை சந்திக்க நேரும். உங்கள் நிறுவனத்தில் முதன்மை வகிக்க நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையிடமிருந்து தனித்திருப்பது போல உணர்வீர்கள். ஆனால் இது வெறும் உணர்வு மட்டுமே. உண்மையில் உங்கள் துணை உங்களிடம் அன்பாக இருப்பார்.

இன்று பணவரவு குறைந்து காணப்படும். பண விஷ யங்களைக் கையாளும்போது விழிப்புடன் இருக்க வேண்டும்.

## சிம்மம்

இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். உங்கள் முயற்சிகள் இன்று எளிதில் வெற்றி அடையும். உங்கள் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

கடின உழைப்பின் மூலம் வெற்றி காண்பீர்கள். கடினமான பணிகளையும் எளிதாக தொழில் சார்ந்த முறையில் மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. பங்கு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் லாபம் காணலாம்.

இன்று தைரியமான மனநிலை காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

## கன்னி

இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். இன்று நம்பிக்கையுடன் சரியான போக்கில் உங்கள் செயல்களை செய்வது சிறந்தது.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். ஒருவரையொருவர் புரிந்துகொள்ள இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

பொறுப்புகளும் செலவுகளும் அதிகமாக காணப்ப டுவதன் காரணமாக இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது.இன்று குறைந்த அளவு ஆரோக்கியமே காணப்படும்.

## துலாம்

இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பதை கடினமாக உணர்வீர்கள். தியானம் அல்லது யோகா மேற்கொள்வதன் மூலம் பதட்டத்திலிருந்து விடுபடலாம்.

பணியைப் பொறுத்த வரை சற்று சரிவு நிலை காணப்படும். இன்று அதிக பொறுப்புகளை கையாள்வதன் காரணமாகச் சில வசதிகளை அனுபவிக்க முடியும்.

உங்கள் மனதில் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இத்தகைய உணர்வு உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும்.

## விருச்சிகம்

இன்று இழப்பிற்கான சாத்தியம் உள்ளது. எனவே கவனமாக இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலையும் திருப்தியையும் அளிக்கும்.

இன்று நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணிகளின் தாமதம் உங்கள் மேலதிகாரிகளின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

உங்கள் மனதில் அகந்தைப் போக்கு காணப்படும். உறவில் நல்லிணக்கம் பேண இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று திடீரென பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் நஷ்டம் ஏற்படாமல் இருக்க நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

பதட்டம் மற்றும் கால் வலி பாதிப்பு இன்று காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.06.2024




இன்று மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் அனைத்து செயல்களையும் குறித்தநேரத்தில் வெற்றிகரமாக முடிப்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்வீர்கள். புதுமையான கருத்துக்கள் மூலம் நீங்கள் வளர்ச்சி காண்பீர்கள்.

உங்கள் துணையுடன் சிறந்த முறையில் தொடர்பு கொண்டிருப்பீர்கள். உங்கள் வீட்டில் நடைபெறவிருக்கும் ஒரு சுப நிகழ்ச்சி பற்றி உங்கள் துணையுடன் கலந்தாலோசிப்பீர்கள்.

உங்களின் நிதி சம்பந்தமான விருப்பங்கள் நிறைவேறும். இன்று அதிக பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று உங்களிடம் காணப்படும் மன வலிமை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் வலுவான திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். அதன் மூலம் வெற்றி காண்பீர்கள் கடின உழைப்பு மற்றும் உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

கடினமான பணிகளையும் எளிதாக மேற்கொள்வீர்கள். வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.இன்று நிதி நிலைமை போதிய அளவு காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். நீங்கள் பங்கு வர்த்தகத்தில் ஈடுபடலாம்.




இன்று சவால்கள் நிறைந்திருக்கும் என்பதால் நீங்கள் எதையும் பொறுமையாக கையாள வேண்டும். இசை மற்றும் பொழுதுபோக்கு விஷயங்களில் பங்கு கொள்வதன் மூலம் பலன் அடையலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது சில போராட்டங்களை சந்திக்க நேரும். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதிலும் சில பிரச்சினைகள் காணப்படும்.

உங்கள் துணையுடன் கவனமாக தொடர்பு கொள்ள வேண்டும். உங்கள் பதட்ட உணர்வை உங்கள் துணையிடம் காண்பிக்க நேரலாம். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும்.




இன்று நீங்கள் செய்யும் செயல்கள் அனைத்திலும் வெற்றி காண்பீர்கள். இன்று புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்கள் பெறுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது.

உங்கள் பணியில் திருப்திகரமான பலன்கள் காண்பிப்பீர்கள். உங்களுக்குள் இருக்கும் திறமையை வெளிப்படுத்தி தரமாக பணியாற்றி தருவீர்கள்.

நீங்கள் அன்புவயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று அதிக பணம் பராமரிக்க இயலும். நிதி விஷயத்தில் முக்கிய முடிவுகள் எடுக்க நேரலாம்.

இன்று தொடை வலி அதிகமாக காணப்படலாம். தியானம் மேற்கொள்வதன் மூலம் அமைதி பெறலாம்.











# சிவனொளிபாத மலையைப் பாதுகாக்கும் நோக்கில் சியபத பினான்ஸின் ‘சியபதயிலிருந்து பூமிக்கு’ திட்டம்

முன்னணி நிதி நிறுவனமான சியபத பினான்ஸ் பி.எல்.சி, ‘சியபதயிலிருந்து பூமிக்கு’ என்ற திட்டத்தின் மூலம், ‘நெமதுமென் பசு அமதும’ (வழிபாட்டின் பின் தூய்மைப்படுத்தல்) என்ற கருப்பொருளின் கீழ், சுற்றுச் சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்தி அதன் கூட்டுறவு சமூகப் பொறுப்பு நிகழ்ச்சியாக, சூழலையும் வன விலங்கு சரணாலயத்தையும், எதிர் கால தலைமுறைகளுக்காக பாதுகாப்பதற்கான முயற்சியின் முதல் படியைத் தொடங்கியுள்ளது.

நுவரெலியா மாவட்டச் செயலாளர் திரு.நந்தன கலபொடவிடம் விசேட அனுமதியைப் பெற்று, சியபத தலைமையகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவம் உட்பட 50 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நுவரெலியா அலுவலகத்தின் அதிகாரிகளுடன் இணைந்து இந்த பணியை ஆரம்பித்தனர்.

இதற்கமைய சிவனொளிபாத மலையை சுத்தப்படுத்தும் ‘சியபதயிலிருந்து பூமிக்கு’ என்ற திட்டத்தின் நோக்கத்திற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், சியபத ஊழியர்கள் ஒரு தொன் பிளாஸ்டிக், பொலித்தீன் மற்றும் பிற கழிவுகளை சேகரித்து, மறுசுழற்சிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டச் செயலாளர் நந்தன கலபொட ‘நெமதுமென் பசு அமதும’ நிகழ்ச்சித் திட்டம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

“ஒவ்வொரு யாத்திரைக் காலத்தின் பின்னரும் எஞ்சியிருக்கும் தொன் கணக்கிலான கழிவுப் பொருள்களைச் சேகரிப்பது கடினமான பணியாகும். வரும் முன் காப்பதே சிறந்தது. எனவே சிவனொளிபாத மலையைப் பாதுகாப்பதற்கான வழி, குப்பை கொட்டுவதைத் தவிர்ப்பது என்பதை யாத்திரிகர்கள் ஏற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானது என்று நாங்கள் நம்புகிறோம். சியபத பினான்ஸின் முயற்சியானது வெறும் துப்புரவுத் திட்டம் என்பதற்கும் அப்பாற்பட்டது - நீண்ட காலத்திற்கு இந்தப் புனிதத் தலத்தைப் பாதுகாக்க மக்களை ஊக்குவிக்கும் சியபதவின் ஒரு திடமான, நிலையான நடவடிக்கையாகும்,”- என்றார்.

இந்த முக்கியமான முன்நோக்கு குறித்த தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட சியபத பினான்ஸின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன,

“சிவனொளிபாத மலை புனிதத் தலத்தைப் பாதுகாப்பது என்பது எமது பாரம்பரியத்தைப் பாதுகாப்பது மட்டுமன்றி, இலங்கையின் உயர்ந்த பல்லுயிர்ப் பெருக்கத்தைக் கொண்ட சுற்றுச்சூழல் அமைப்பையும் பாதுகாப்பதாகும். எனவே, பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் குப்பைகளால் எதிர்நோக்கப்படும் பெரும் அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு, அதன் பாதுகாப்பை பொறுப்பேற்க வேண்டியதும், கவனத்துடன் இருப்பதும் நம் அனைவரின் கடமையாகும், அதற்கு நாம் கூட்டாக முன்மாதிரியாக இருக்க வேண்டிய தருணம் இது. இந்தத் திட்டத்தின் வெற்றியால் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். எதிர்வரும் தலைமுறைகளுக்கு சிவனொளிபாத மலையைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறோம்.” - என்றார்.








# இணைந்த ஆய்வு, புத்தாக்கமான ஆய்வுகூடத்தை அமைப்பது தொடர்பில் SLIIT - Huawei இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்



பல்லேகலவில் உள்ள SLIIT கண்டி பல்கலைக்கழகத்தில் கூட்டு ஆய்வு முயற்சிகளை ஊக்குவித்தல் மற்றும் புத்தாக்கமான ஆய்வுகூடத்தை அமைக்கும் நோக்கில், உலகளாவிய ரீதியில் உள்ள மாபெரும் தொழில்நுட்ப நிறுவனமான Huawei உடன் SLIIT கண்டி பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டது.

SLIIT இன் தலைவரும் வேந்தருமான பேராசிரியர் லக்ஷ்மன் ரத்னாயக, Huawei Technologies Lanka நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சன்ங் ஜின்சா ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த நிகழ்வில் கல்வியியல் பிரதித் துணை வேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் ரத்னாயக, ஆய்வு மற்றும் சர்வதேச விவகார பிரதித் துணை வேந்தர் பேராசிரியர் சமந்த தெலிஜ்ஜகொட, பொறியியல் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் அஜந்த கோமஸ், கணினிப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பிரதீப் அபேகுணவர்த்தன, SLIIT கண்டி பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பீடாபதிதி கலாநிதி மாதவ ஹேரத், சட்ட மற்றும் பெரு நிறுவன விவகார சிரேஷ்ட முகாமையாளர் செல்வி நடாஷா ரணதுங்க மற்றும் செல்வி சொனாலி சேனா நாயக ஆகியோர் SLIIT சார்பில் கலந்துகொண்டனர்.

அதேநேரம், Huawei நிறுவனத்தின் சார்பில் EBG இன் பிரதித் தலைவர் நீ ஷாபிங், EBG இன் அரசாங்க மற்றும் பெருநிறுவனங்களுக்கான பணிப்பாளர் இசுறு ஜயசேகர, EBG இன் தீர்வுகளுக்கான பணிப்பாளர் நதுன் குணவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

கண்டியில் உள்ள Huawei தகவல் தொழில்நுட்ப கல்விக்கூட புத்தாக்க ஆய்வுகூடம் ஆய்வு மற்றும் தயாரிப்புக்களுக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளை வழங்கும். கூட்டிணைந்த ஆய்வு, பயிற்சித் திட்டங்கள், சான்றிதழ்கள், உள்ளகப்பயிற்சி, தொழில்த்துறை மற்றும் துறைசார் பயிற்சி வாய்ப்புக்களை ஊடாகத் தகவல் தொழில்நுட்பத்தில் உள்ளகத் திறமைகளைக் கட்டியெழுப்புவது இந்தக் கூட்டாண்மையின் நோக்கமாகும்.

முதற்கட்டமாக SLIIT பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நோக்கில் SLIIT மற்றும் Huawei ஆகிய இணைந்து சான்றளிக்கப்பட்ட பயிற்சி நிலையமொன்றை அமைக்கவிருப்பதுடன், இவர்கள் வெளித்தரப்பினருக்குப் பயிற்சியளிப்பார்கள். இந்தக் கூட்டாண்மையின் ஊடாக SLIIT கண்டி பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் Huawei இன் வசதிகளைப் பார்வையிட வாய்ப்புக் கிடைக்கும். இதற்கு மேலதிகமாக கண்டி பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் புத்தாக்க சவால்கள் மற்றும் போட்டிகள் நடத்தப்படவிருப்பதுடன், இது பாடசாலைகள் மத்தியிலும் விஸ்தரிக்கப்படவிருப்பதுடன் விருந்தினர் விரிவுரையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப ரீதியாகக் கலந்துரையாடல்கள் என்பனவும் நடத்தப்படவுள்ளன.


இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடாக SLIIT பட்டதாரிகள் இலங்கை முழுவதிலும் உள்ள Huawei தளங்களில் உள்ளகப் பயிற்சிகள் மற்றும் களவிஜயங்களை மேற்கொண்டு பெறுமதியான தொழில்துறை அனுபவத்தைப் பெற்றுக் கொள்வார்கள். கல்வியியல் பீடமானது Huawei சான்றிதழ் பாடநெறிகள் மற்றும் நாட்டின் தகவல் தொழில்நுட்ப பணியாளர் சக்திக்குத் தேவையான திறமைகளைக் கட்டியெழுப்பும். இணைந்த ஆய்வு முயற்சிகளும் பொறுப்பேற்கப்படும்.

SLIIT கண்டி பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பீடாதிபதி கலாநிதி மாதவ ஹேரத் குறிப்பிடுகையில்,

“SLIIT மற்றும் Huawei இற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டாண்மையானது SLIIT கண்டி பல்கலைக் கழகத்துக்குப் புதிய அத்தியாயம் மாத்திரமன்றி, இங்கையின் தகவல் தொழில்நுட்பத் துறையின் புத்தாக்கம் மற்றும் ஆய்வுக் கலாசாரத்தையும் பலப்படுத்தும். கூட்டு ஆய்வு மற்றும் புத்தாக்க ஆய்வுகூடத்தை நிறுவுவதன் ஊடாக நமது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உலகளாவிய தொழில்நுட்ப முன்னணியாளருடன் ஒத்துழைக்க இணையற்ற வாய்ப்பை வழங்கும். தொழில்துறையின் நிபுணத்துவத்துடன் கல்விசார் சிறப்பை இணைப்பதன் ஊடாக நிஜ உலக சவால்களை சமாளிக்கவும் அதிநவீன தொழில்நுட்பத் தீர்வுகளை உருவாக்கவும் எம்மால் முடியும். கல்வித்துறையும் தொழில்துறையும் இணைவதன் ஊடாக மாணவர்களின் நடைமுறைத் திறன் விருத்தியடைவதுடன் மாத்திரமன்றி, நாட்டின் தொழில்நுட்பத் திறன் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செலுத்தும். டிஜிட்டல் எதிர்காலத்துக்குத் தேவையான திறமையாளர்களை உருவாக்குவதற்கான ஒத்துழைப்பை நாம் எதிர்பார்க்கின்றோம்.” - என்றார்.




# அதிநவீன Vishwa தனிநபர் வங்கிச்சேவை செயலியை அறிமுகப்படுத்தியது சம்பத் வங்கி




இலங்கையில் வங்கித்துறையில் புத்தாக்கங்களில் முன்னிலை வகித்து வருகின்ற சம்பத் வங்கி, தனது புரட்சிகரமான மொபைல் பயன்பாடான Sampath Vishwa Retail ஐ பெருமையுடன் அறிமுகப்படுத்தியுள்ளது.

இணைய வங்கிச்சேவைத் துறையில் குறிப்பிடத்தக்கதொரு சாதனையாக இந்த முற்போக்கான அறிமுகம் அமைந்துள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற சௌகரியம் மற்றும் அணுகலுக்கு உத்தரவாதமளிக்கின்றது.

ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட பயனர் தளத்துடன், அதாவது, வங்கியின் ஒட்டுமொத்த வாடிக்கையாளர்கள் மத்தியில் கிட்டத்தட்ட 25 வீதத்தை இது பிரதிநிதித்துவம் செய்வதுடன், இணைய வங்கிச்சேவையில் சௌகரியத்தைப் பொறுத்தவரையில், Sampath Vishwa Retail ஆனது சிகரத்தின் உச்சியில் திகழ்கின்றது.

புதுப்பிக்கப்பட்டு, அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள இந்த மொபைல் பயன்பாடு, தங்குதடையின்றிய, பாதுகாப்பான மற்றும் உள்ளுணர்வை ஏற்படுத்துகின்ற வங்கிச்சேவை அனுபவத்திற்கு உறுதியளித்து, இத்துறையில் புத்தாக்கத்தை முன்னெடுப்பதில் சம்பத் வங்கியின் அர்ப்பணிப்பையும் மீள உறுதிப்படுத்துகின்றது.

தங்குதடையின்றிய இடைமுகம் மற்றும் சர்வதேச தராதரங்களுக்கு அமைவான மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் ஆகியவற்றைக் கொண்டு, மீள்வடிவமைக்கப்பட்டுள்ள இச்செயலி, பயனர் அனுபவத்தில் புதிய தர ஒப்பீட்டு நியமத்தை நிலைநாட்டுகின்றது. வேகமான வழிகாட்டல் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளதால், ஒரு சில அசைவுகள் அல்லது தொடுகைகளுடன் பயனர்கள் தாம் விரும்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட வடிவமைப்பில் சம்பத் வங்கி கொண்டுள்ள அர்ப்பணிப்புக்கு இது சான்று பகருகின்றது.

மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் சௌகரியத்தைப் பொறுத்தவரையில் மிகவும் தைரியமான ஒரு நடவடிக்கையாக, கைவிரல் அடையாளம் அல்லது முக அடையாள சரிபார்ப்புடன் எவ்விதமான சிரமங்களுமின்றி பயனர்கள் தமது கணக்குகளுக்கான அணுகலைக் கொண்டிருப்பதற்கு இடமளிக்கும் வகையில், உயிரியல் (பயோமெட்ரிக்) வழிமுறையில் உள்நுழைவதற்கான ஆற்றல்களையும் இச்செயலி அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தச் செயலி கொண்டுள்ள அதிநவீன உயிரியல் பாதுகாப்பம்சங்களுடன், செய்தி வடிவத்தில் அனுப்பப்படுகின்ற ஒரு தடவை உபயோகத்திற்கான கடவுச்சொல்லைப் பெற்றுக் கொள்வதற்கு ரோமிங் சேவைகளை நம்பியிருக்க வேண்டிய சர்வதேச பின்னணிகளின் போது கூட பரிவர்த்தனைகளை தங்குதடையின்றி மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

# செலான் வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி அரசாங்கத்துடன் இணைந்து கடன் திட்டம்



செலான் வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து, சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையை (SME) மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து செயற்பாட்டு மூலதனம் மற்றும் நீண்ட காலக் கடன்களை வழங்கவுள்ளது.

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் உள்ளூர் வணிகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் செலான் வங்கி, விவசாயம், மீன்பிடி, அலங்கார மீன்வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சுற்றுலா மற்றும் ஏற்றுமதி சார்ந்த வணிகங்கள் உட்பட பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு இந் நிதி உதவியை வழங்கும். செலான் வங்கி, இலங்கையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் ஒரு நிலையான பங்காளியாக இருந்து வருகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கயின் கடன் வரம்புகள் மூலம் வங்கியானது கடந்த காலங்களில் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் மற்றும் சிறு தேயிலை உரிமையாளர்களுக்கு கடன்களை வழங்கியுள்ளது.

தங்கள் செயற்பாட்டு மூலதனத்தை அதிகரிக்க விரும்பும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினர், மூன்று வருட காலத்திற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம் ஊடாக பயனடைவர். மேலதிகமாக, கட்டடம் கட்டி முடிக்கும் பணி, நிலையான சொத்துக்களை வாங்குதல் அல்லது வணிக தேவைக்கான வாகனங்களை வாங்குதல் போன்ற பிற தேவைகளுக்காக, திருப்பிச் செலுத்த ஐந்து வருட கால அவகாசத்துடன் கூடிய கடன்கள் கிடைக்கவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மூலோபாய ஒத்துழைப்பு பற்றி கருத்து தெரிவித்த செலான் வங்கியின் கிளைக் கடன் பிரதி பொது முகாமையாளர் ரணில் திசாநாயக்க,

“சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு ஆதரவளிக்கும் முகமாக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதில் நாங்கள் பெருமையடைகிறோம். எங்களின் போட்டித்தன்மை வாய்ந்த கடன் வழங்கல்கள், SME Hub மற்றும் ‘ஏற்றுமதி நிபுணர்’ போன்ற அர்ப்பணிப்புள்ள சேவைகள் மூலம் செலான் வங்கி பல்வேறு தொழில்துறைகளை சார்ந்த வணிகங்களின் வெற்றிக்கு ஊக்கியாக இருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.” - என்றார்.